ஓம்

விநயகநம

சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் -2 காலயுத்திவருஷ மார்கழி மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை [22-12-1978] சுடர் 6

ஆயிரம் கோடி மந்திரம் ஓதிக் காலம் கழிப்பீர். ஆனுல் நீதியால் வாழ்ந்து சிவனைத் தியானம் செய்ய மாட்டீர். இதுவாஉம் ஓதலின்பயன்

இப்படியாக நாம் சொல்லவில்லை திருநாவுக்கரசர் சொல்கின்றார். அவரை விட மேம்பாடாக பல பேதைப் பிராமணர் ஒலிபெருக்கியிலும் ஆடு அலறுவது போல் கத்தி காலத்தை வீணே கழிக்கிறார். மக்களை ஏமாற்றி பணம் பறிக்க வாய்ச் சாதுரியமாக பிரசங்கியள் பேசுகிறார். இத்தகைய ஏமாற்று பேர் வழிகளில் எத்தனை பேர் சிவனை ஒரு கணமேனும் நீதியான நிலையில் தியானம் செய்ய வல்லவர். பேதை மக்களே நீங்கள் நால்வரைப் போற்றுவீர் ஆனுல் நால்வர் சொல்வதை ஏற்க மறுக்கின்றீர்.

பெரும்பாலும் பொய் உடைய உடம்பை பொருள் என்று காலம் கழிக்கின்றீர். உண்மை எது என்று ஏற்க உணர்வில் தெளீவீர் அல்லீர்!

ஐயோ பேதைப் பிராமணனும் அவனை நீ செய்யடா அவன் விசரனை விட்டு, என்று தூண்டி விடும் பாதகரும் ஏனையோரும் எம் சமய நிலையை எந்த ஒரு அறிவாளியும் கண்டு நாணிக் கவலை கொள்ளும் படி ஆக்கிவிட்டனர்.

கோவில் பிரசாரத்திற்கு உரிய இடமன்று. அங்கு எம்பெருமானுக்கு தொண்டு செய்து உய்தி அடைய ஏற்ற இடம். ஐயோ! அநியாயமாக பேதையர் கூட்டம் இன்று பிரசாரத்திற்குரிய இடமாக்கி அருகாமையில் ஒருவரும் அமைதியாக வாழ முடியாத வகைசெய்து கொண்டு வருகின்றது. திரு. கா கைலாசநாதக்குருக்கள் சொன்ன கருத்தை அவரது பிராமண சமூகமே ஏற்க மறுக்கின்றது. இதனுல் அவர்கள் பெரும் பாலும் தாம் பிராமணர் அல்லர் என நிருபித்து விட்டனர். கோவிலில் நீதியாக நடக்க முடியாத பிராமணனது வாழ்வை அறிந்தால் அவன் மது முதல் அனைத்து பாதகங்களையும் தன்னிடத்து கொண்டவனுக இருக்கின்ருன். அவன் தரவளியை பல எஜமான்கள் திருப்பணிச்சபைகள் தம்பிரான் சுவாமிகள் சிவத்தமிழ்கள் தங்கள் கையாளாகவும் வைத்துள்ளனர்.

ஆகவே உண்மையில் சைவம் என்ருல் சிவசம்பந்தமாவது. அது தூய்மை உடையது. நீதியுடையது. அதன் செயல்கள்யாவும் அமைதியில் நடைபெறுவது.

இன்று கோவிலை பிரசார மேடையாக்கி ஒலி பெருக்கி முதலியன பாவித்து மது உண்டல் மாமிசம் புசித்தல் முதலிய பல பாதகங்களை இரகசியமாக செய்யும் பேதைப் பிராமணனும் கள்ளச் சாமியளும் புகழை விரும்பும் திருப்பணிச்சபை யாரும் செய்வது தவறு என்று திருநாவுக்கரசரே சொல்கின்ருர்.

இந்த ஒலி பெருக்கி குழறல் உமது வாழ்விற்கு உரியது அன்று. உமது தாழ்விற்கும் துயருக்கும் வித்தாவது. இது வந்தபின் தமிழ் பிரதேசங்களில் நேரும் அல்லலை அவதானியுங்கள்; இவை நீடித்தால் என்றுமே இல்லாத அல்லல் இன்னமும் பெருகும். சத்தமே மிகு மோசமான கொலையாளி என்பதும் ஒரு கருத்துமாகும்.

எமது கோவில்களை இடித்து கோட்டை கட்டி எம்மை அடிமையாக்கிய அந்த மேல் நாட்டு பாதகர் கண்டு கொண்ட கலாச்சாரமான ஒலி ஒளி இரண்டையும் எம் மக்கள் இன்று பெரிதென மதிக்கின்றனர். இஃது நீதி உடையதோ? எம் முன்னைப் பெரியோர் காட்டிய நல் நெறிகளை நீக்கி பாதகரின் நெறியையே கோவிலில் புகுத்திக் கொண்டு நன்மை பெறவா முற்படுவீர்?.

தமிழ் மக்களாய நீர் தீங்கின்றி என்றும் வாழவேண்டின் ஒலிபெருக்கியிலும் ஓதி உலக மக்கள் கேட்கவைப்பதிலும் நீதியுடன் வாழ்ந்து கோவிலில் இறைவன் இருக்கின்ருர் என்பதை உணர்ந்து அமைதியும் சாந்தமும் நிலவிட நாம் இனியும் இனப் பகையால் இனக்கலவரங்களால் இயற்கை அழிவால் இடருருவகை நல்லவற்றை உணர்ந்து; நல்லவற்றைத் தெளிந்து நன்றுடன் நீ வாழ திருநாவுக்கரசரது நன் மொழிகள் நிறைந்த அப்பதிகத்தைக் கீழே தருகின்றேன். தமிழ் சமுதாயமே நீ நல்நிலைப்படவேண்டின் திருநாவுக்கரசர் சொல்வதையாதல் கேள்!

பொய்விரா மேனி தன்னைப் பொருளெனக் காலம் போக்கி
மெய்விரா மனத்த னல்லேன் வேதியா வேத நாவா
ஐவரால் அலைக்கப் பட்ட வாக்கைகொண் டயர்த்துப் போனேன்
செய்வரால் உகளுஞ் செம்மைத் திருச்சோற்றுத் துறைய னுரே.

பொய் நிரம்பிய உடம்பை பொருள் என்று அதனை நம்பி பல காலம் வீணே போக்கி உண்மை நிரம்பிய மனமுடையனுக இருப்பவன் அல்லேன் நான். அறம் நின்ற அந்தணு சிவனே! வேதம் ஓதும் நாவனே! பஞ்சப் புலன்கள் என்னும் கொடியரால் அலைக்கப்பட்ட இந்த உடம்பைக் கொண்டு நான் நன்ருக உலைந்து அலைந்து சிவனே உன்னைத் தியானமும் செய்ய முடியாதபடி அயர்த்துப் போனேன்! சிறந்தவரால் மீன்கள் குதித்தோடும் பெருகிய நீர் வளமுடைய செம்மை வாய்ந்த திருச்சோற்றுத்துறை என்னும் தலத்தில் இருக்கும் கடவுளே என் நிலையை உணர்ந்தருள்க. 1

கட்டராய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்க வேண்டா
எட்டவாங் கைகள் வீசி எல்லிநின் றுடு வானை
அட்டமா மலர்கள் கொண்டே ஆனஞ்சும் ஆட்ட ஆடிச்
சிட்டராய் அருள்கள் செய்வார் திருச்சோற்றுத்துறையனுரே.

கடிய மனமுடையராக நின்று உலகத்தோரே நீங்கள் உம் காலத்தைக் கழிக்காதீர்கள். தமது எட்டு என்னும் திருக்கரம் எடுத்து வீசி இருளில் நின்று ஆடுகின்ற பெருமானை எட்டு வகையான மலர்கள் எடுத்துக் கொண்டு பசுவிடத்துப் பெறும் ஐந்து திரவியமாகும் பால் தயிர் நெய் சலம் சாணம் இவையால் அபிடேகம் செய்து ஏத்திட தாம் நீராடி நின்று மிகப் பெருமை வாய்ந்த கருணை உடையராய் உமக்கு அருள்கள் செய்வார் திருச்சோற்றுத்துறை என்னும் தலத்து அமர்ந்த எம் கடவுளானவர். 2

கல்லினுற் புரமூன் றெய்த கடவுளைக் காத லாலே
எல்லியும் பகலு முள்ளே யேகாந்த மாக வேத்தும்
பல்லில்வெண் டலைகை யேந்திப் பல்லிலந் திரியுஞ் செல்வர்
சொல்லுநன் பொருளு மாவார் திருச்சோற்றுத்துறையனுரே.

மேரு மலை என்னும் கல் மலையைக் கனியச் செய்து வளைத்து புரங்கள் மூன்றையும் அதனுலே அம்பு பூட்டி எய்து எரித்த கடவுள் சிவனைக் காதலினுலே இரவும் பகலும் நீவீர் தனித்திருந்து உள்ளத்துள்ளே ஏகாந்தமாகப் போற்றுங்கள். பல் இல்லாத வெண்தலை ஓடு திருக்கையில் ஏந்தி பல இல்லத்திற்கு திரிகின்ற செல்வர் அவர் எம் சிவமூர்த்தி அவர் சொல்லும் அதனிடம் தோற்றும் நற்பொருளுமாவர் திருச்சோற்றுத் துறையில் இருந்தருளும் கடவுளானவர். 3

கறையராய்க் கண்ட நெற்றிக் கண்ணராய்ப் பெண்ணோர் பாகம்
இறையராய் இனிய ராகித் தனியராய்ப் பனிவெண் திங்கட்
பிறையராய்ச்செய்த வெல்லாம் பீடராய்க் கேடில்சோற்றுத்
துறையராய்ப் புகுந்தென் னுள்ளச் சோர்வுகண் டருளினுரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சுண்டமையால் கண்டமும் கறுத்த கறை உடையவராய் நெற்றியில் கண் உடையவராய! பெண்ணை ஓர் பா ம் உடைய கடவுளாகி! அடியார்க்கு மிகவும் இனியராகி குளிர்ந்த வெள்ளை நிறமுடைய இளம் பிறை அணிந்தவராகி! தாம் செய்யும் செயல் யாவும் பெருமைக்குரியவராகி! கேடில்லாத திருச்சோற்றுத்துறை என்னும் தலத்து இருப்பவராய் இருக்கும் கடவுள் அந்தோ இப்பிறவியில் தூய்மையுடன் நிற்கும் எனக்கும் இத்துயரமோ என்று நினைந்த என் உள்ளத்தின் சோர்வு கண்டு அருள் செய்தார். 4

பொந்தையைப் பொருளாவெண்ணிப்பொருக்கெனக் காலம்பேனேன்
எந்தையே ஏக மூர்த்தி யென்றுநின் றேத்த மாட்டேன்
பந்தமாய் வீடு மாகிப் பரம்பர மாகி நின்று
சிந்தையுள் தேறல் போலுந் திருச்சோற்றுத்துறையனரே.

எனது பொத்தல் உடைய உடலையே யொருளாவது என எண்ணி அதனலே விரைவிரைவாக என் காலத்தை வீணுக்கினேடீ. எந்தை பெருமானே! சிவனே! ஏகமாய் எங்கும் எல்லார்க்கு ஐ ஏடவுளானவனே என நினைந்து வணங்கிடமாட்டேன். பந்தங்களாகவும் பந்தம் களைந்த முத்தியாகவும்; அறிதற்கரிய பரம்பொருளாகவும் நின்று என் சிந்தையில் தித்திப்பவருமாகினூர் திருச்சோற்றுத் துறை அமர்ந்த கடவுளானவர். 5

பேர்த்தினிப் பிறவா வண்ணம் பிதற்றுமின் பேதைபங்கன்
பார்த்தனுக் கருள்கள் செய்த பாசுப தன் திறமே
ஆர்த்துவந் திழிவ தொத்த அலைபுனற் கங்கை யேற்றுத்
தீர்த்தமாய்ப் போத விட்டார் திருச்சோற்றுத் துறையனரே.

இனியொருகால் இவ்வுலகில் பிறவாத வண்ணம் எம்பெருமானை உம்மால் இயன்ற வார்த்தை கொண்டு போற்றி பெண்ணொரு பாகமாயவனை; அத்துடன் அருச்சுனனுக்கு தருமத்தை நிலை நாட்டிட கொடியவரான துரியோதனதியரை வென்றிட பாசுபதபடை கொடுத்தருளிய பெருமான் அற்புதங்களை நன்கு புகழ்ந்து பிதற்றுங்கள். ஆரவாரித்து வந்து குதித்தோடும் கங்கை நதியை திருச்சடையில் ஏற்றுத் தீர்த்தமாக்கி பின்னர் அதனைப் போகவிட்டார் திருச்சோற்றுத் துறை என்னும் தலத்தில் இருந்த கடவுள்.

கொந்தார்பூங் குழலி னுரைக் கூறியே காலம் போன
எந்தையெம் பிரானய் நின்ற இறைவனை ஏத்தா தந்தோ
முந்தரா அல்கு லாளை யுடன்வைத்த ஆதி மூர்த்தி
செந்தாது புடைகள் சூழ்ந்த திருச்சோற்றுத் துறைய னரே.

அழகான எழில் மிகுந்த பெண்களை அணைந்து பெறும் இன்பத்திற்காக வேண்டி அவரைப் புகழ்ந்து கூறித்திரிந்து என் காலம் போனது எனது தந்தையும் எமது பெருமானும் நின்ற கடவுளை ஏத்தாது அந்தோ என் செய்து என் வாழ்வைப் பாழாக்கினேன். முன் செல்லும் நாகத்தின் படமொத்த அல்குலுடைய பெருமாட்டியை தன் உடலில் ஒன்ருக வைத்த ஆதியான மூர்த்தி சிவன் அவனே. செந்தாதுப் பொடிகள் உலர்த்தும் மலர் சோலை சூழ்ந்த திருச்சோற்றுத் துறையில் அமர்ந்த கடவுளாயவன். 7

அங்கதி ரோன வனை அண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன் வழியே போவதற் கமைந்து கொண்மின்
அங்கதி ரோன வனை யுடன்வைத்த ஆதிமூர்த்தி
செங்கதி ரோன்வணங்குந் திருச்சோற்றுத் துறையனரே.

அழகிய ஒளி தரும் கிரணமுடைய சூரியனைக் கடவுளாக நீர் எண்ண வேண்டாம். மிக்க வெப்ப ஒளியுடைய சூரியனது ஒளியை உண்மையில் தருபவன் சிவன். அவன் வழியாக நீர் வாழ்வதற்கு அமைந்து நில்லுங்கள். அழகிய கதிருடைய சூரியனைத் தனக்கு ஒரு கண்ணுகக் கொண்டு சூரியனும் தோன்ற முன் தோன்றிய கடவுளாயவன் எம் கடவுள். அந்த கடவுளையே இந்த தலத்து சூரியனும் பூசித்து வணங்கி தமக்குரிய ஒளி பிரகாசம் அருளிப்பாடு அத்தனையும் பெற்றுக்கொண்டான். 8

ஓதியே கழிக்கின் றீர்கள் உலகத்திர் ஒருவன் தன்னை
நீதியால் நினைய மாட்டீர் நின்மலன் என்று சொல்லீர்
சாதியா நான்முகனுஞ் சக்கரத்தானுங் காணுச்
சோதியாய்ச் சுடர தானுர் திருச்சோற்றுத் துறையனரே.

உலக மக்களே! நீவிர் இரவும் பகலுமாக பலவற்றையும் ஓதி உமது காலத்தைக் கழிக்கின்றீர்கள். நீர் அவ்வாறு செய்யும் போது பல பாதகங்களையும் செய்தும் செய்விக்க உடந்தையாக இருந்தும் உமது ஓதலைச் செய்கின்றீர்கள். அந்த ஏகனய கடவுளை நீதயாக நடந்து கொண்டு நினைய மாட்டீர்கள். உமது மலப்பற்றுடைய போக்கால் கடவுளை நின்மலன் எனச் சொல்ல மாட்டீர் சாதியில் தலைமை உடையேன் என சாதித்து நின்ற நான் முககடவுளும், அவன் தந்தை சக்கரமுடைய கடவுள் நாரணனும் கூடி தலைமைபாட்டாலும் தேடிக் காண மாட்டாத சோதியாய் அச்சோதி திரண்ட சுடராகி நின்ருர் திருச்சோற்றுத்துறை இருக்கும் எங்கடவுளானவர். 9

மற்றுநீர் மனம்வையாதே மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றதோர் உபாயந் தன்னுற் பிரானையே பிதற்று மின்கள்
கற்றுவந் தரக்க னேடிக் கயிலாய மலை எடுக்கச்
செற்றுகந் தருளிச் செய்தார் திருச்சோற்றுத் துறையனரே.

உலகத்திரே உமக்கொன்று சொல்வேன். அதுதான் மற்று ஒரு கடவுளிடம் நீர் மனம் வையாது உடம்பு இறந்த பின் அங்கு வரப் பெறும் மறுமைத்துயரைக் கழித்திட வேண்டினல் நான் சொல்லித் தரப் பெற்ற இந்த உபாயத்தினல் எம்பெருமான் சிவனையே பிதற்றி என்ருளும் போற்றுமின்கள். பலதையும் கற்று வந்த இராக்கதன் இராவணன் ஓடிச்சென்று திருக்கைலாய மலையை எடுத்திட அவன் மேல் கோபமுற்று அவனை திருக்கால் பெருவிரலால் மிதித்து நெரித்து மகிழ்ந்து பின்னர் அருளும் செய்தார் திருச்சோற்றுத்துறையில் இருக்கும் கடவுளாயவர்.

இராமன் இராவணனைக் கொன்றவன். ஆனல் சிவன் எம் இறைவன் தம் இருப்பிடமாய திருக்கைலையை எடுத்திட நினைந்து முது கால் தூக்கிட அவனை மலைக்கீழ் நெரியும் படி திருப் பெருவிரலால் ஊன்றி அமத்தி நெரித்திட்டவர். இராவணன் அது தாங்கிட முடியாது அலறிப் புலம்பிட அவன் செய்த பிழைக்கு தண்டித்து பின்னர் உவந்து மூன்று கோடி வாழ்நாள் கொடுத்தவர். இதனல் இராவணகுகு அருளிய எம் அப்பன் கருணை புலப்படுவது. இந்த இருப்பிடத்தை பெயர்த்திட நினைந்த இராவணனுக்கும் அருள் செய்த திறத்தை திருநாவுக்கரசர் பலகாலும் மகிழ்ந்து போற்றுபவர். ஆதலின் அந்தக் கருணை உடைய மூர்த்தியின் இருப்பிடத்தை திருநாவுக்கரசர் திருக்கையில் உழவாரப் படை கொண்டு செருக்கி தூய்மை செய்ய தொண்டு செய்தவர். இதனை நம்மக்கள் உணருங்கள் கோவிலைத் தொண்டு செய்யும் இடமாக அமையுங்கள். 10

ஓர் எச்சரிக்கை

மந்திரங்கள் தேவவடிவுடையன. உயிர்த்தன்மை உள்ளன; அவை இயல்பில் அன்றி மின்சாரம் மூலம் ஓதப்பட்டால் அவை தமது கபீட்ச நிலையற்று சடமாகிப் பிரேதம் போலாகுவன;

ஏனெனில் மின்சாரம் உடலில் உயிரைக் கொலை செய்கின்றது உயிர் தன்மையை அழிக்கின்றது மின்சாரம் தாக்குண்டால் யாரும் பிழைக்கதுண்டோ. இதனை எம்மக்கள் உணரவேண்டும்; அந்தணர்கள் மின்சாரத்தில் மந்திரம் ஓதும் போது தடுத்து எமது அந்தண குலத்தை அறிவுடைய மக்களாக்கல் அனைவரது கடமையுமாகும் ஓர் கோவில்கட்டி கும்பாபிசேகம் செய்வதிலும் இது பெரும் புண்ணியமாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசரை பெரியபுராணம் அப்பூதியார் காரணமாக காட்டுவது.

திருநாவுக்கரசர் தபோதனியார் திலகவதியார் வேண்டுதலால் சிவன் கொடுத்த சூலைநோயால் உய்ந்து உறுதி நிலைபெற்ற பிற்பாடு பல தலங்களையும் தரிசித்துத் தொண்டு செய்து வருகின்றார் அவர் செய்யும் தொண்டு உழவாரம் கொண்டு எம்பிரானது கோவில் வீதிகளைச் செருக்குதலாகும புல்லும் கல்லும் அகற்றி மனம் கசிந்துருக திருவாயால் போற்றிக் கொண்டு தொண்டு செய்தார் என பெரிய யுராணம் செய்தி தருகின்றது. அதனாலே அவரை உழவாரப் படையாளி என பெரிய புராணம் சொல்கின்றது. இவரது உழவாரப் படையை ஈழத்து ஓர் தினசரி சவர அலகிற்கு ஒப்பிட்டு பேசினமையால் சந்திர தீபம் உதயமாகும்படி உள்ளது. சந்திரதீபமும் அவரது உழவாரப்படையின் வழியாகும்.

அந்த உழவாரப் படையின் தூய்மைத் தொண்டால் அவர் தன் மனதில் எழக்கூடிய காமாதி குணங்களைப் போக்கும் படியான நிலையை வருவித்துக் கொண்டது. அந்த உழவாரப் படைத் தொண்டால் உழவாரப்படை வீதி செருக்கும் போது எழுந்த கல்லையும் செம்பொன்னையும் ஒன்றாகக் கருதும்படி ஆக்கித் தந்தது. அவர் பாட்லுடன் உழவாரத் தொண்டும் செய்த பேற்றால் திருவீழிமிழலைச் சிவனிடம் வாசியில்லாத காசு பெற்றுத் தந்தது. தன் மகனான சம்பந்தர்க்கு சிவன் வாசியுடைய காசு கொடுத்தவர். அவர் வாசிதீரவே காசு நல்குவீர் எனப்பாட பின்னரே வாசி தீர்த்துக் கொடுத்தவர். இன்றைய உலகில் பேச்சிலும் பிரசங்கத்திலும் மேலாக தொண்டுதான் பெரிது என நம்மக்கள் தெளிந்து கொள்ளும் பொருட்டு திருநாவுக்கரசர் திருத்தொண்டை அப்பூதி அடிகள் என்னும் அந்தணர் பெருமான் எப்படி மதித்திருந்தார் என பெரிய புராண வரலாற்றின் மூலம் கீழே வெளிப் படுத்துகின்றோம்.

அப்பூதி அடிகள் என்னும் அந்தணர் பெருமான் நீதியுடைய நிறைந்த செல்வராவர். அவர் தமது செல்வத்தைக் கொண்டு தருமம் பல செய்பவர். பசுப்பேணல் பூஞ்சோலை வளர்த்தல் மக்கள் நீதியான முறையில் பொருள் பெறும் பொருட்டு பண்டம் பரிமாறும் நிறைவுடைய கடைகள் எருமை முதலிய ஏனைய மிருகங்கள் பலவும் கொலைபடாதபடியேனும் நிலையம் யாவும் வைத்து அவற்றில் எல்லாம் தமது பெயரை விளம்பரம் செய்யாது திருநாவுக்கரசர் நாமமே பொறித்து வைத்தார். ஆனால் திருநாவுக்கரசர் பற்றி அப்பூதி அடிகள் கேள்வியுற்றவரே அன்றி கண்ணால் ஒரு நாளும் காணவில்லை. அப்படிஇருந்தும் நாவுக்கரசரையே தாம் வழிபடும் கடவுள் போலக் கொண்டுள்ளார்.

இது இப்படி இருப்ப அப்பூதி வாழும் திங்களூருக்கு திருநாவுக்கரசர் ஓர் நாள் செல்கின்றார். அப்பூதியாரை நாவுக்கரசரும் அறியார். திங்களூரில் சென்ற உடனே அப்பூதியாரின் தரும நிலையங்களில் தமது பெயர் எழுதியிருக்கக் காண்கின்றார். கண்ட நாவுக்கரசரது சிந்தையை அப்பூதியாரைத் தேடிப் போக செய்தது. அவர் வீடுசெல்ல அப்பால் பெரியபுராணம் சொல்வதைகீழே காண்க. உழவாரப்படை திருத்தொண்டின் பெருமையை உணருங்கள்.

அங்ககன்று முனிவரும்போய் அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர் எனக்கேட்டு நண்ணினார்·

அதுகேட்டு அங்கு நீங்கி எம்முனிவர் பெருமான் திருநாவுக்கரசரும் சென்று அப்பூதி அடிகளார் தங்கிய திருமனையின் முன்வாயிலின் சார்வாகப் போதலும் அதுபோது; திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து நோக்கமும் சிவனுக்காகக் கொண்டு வாழும் கோலக்குறியுடன் ஒருவர் தம் வாயிலின் வெளிவந்தமை கண்டு உள்ளிருந்த திங்களூரின் அந்தணர் பெருந்தகை அப்பூதியார்க்கு எம் தலைவாய்தலில் யாரோ ஒருநங்கள் பெருமானுடைய ஆள் வந்துள்ளார் எனக் கூறக்கேட்டு உடன் வெளியே வந்தார். 9

கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும் அரசின்எதிர் அந்தணனார்
முடிவில்தவம் செய்தேன்கொல்! முன்பொழியும் கருணைபுரி
வடிவுடையீர்! என்மனையில் வந்தருளிற் றென் என்றார்·

விரைவாக அப்பூதி அடிகள் வந்தணைந்து திருநாவுக்கரசரை உண்மை தெளியும் ஓர் அடியவர் என நினைந்து திருவடி வணங்கிடலும் அப்பூதியார் தம் திருவடிகள் பணியும் முன்பே தாம் பணியும திருநாவுக்கரசர் எதிராக எம் அந்தணர் பெருமான் அப்பூதி அடிகள் அவரை நோக்கி; ஐயனே முடிவிலாத தவம் யான் செய்துள்ளேன் போலும் உமது காட்சியால் முகம்பொழியும் கருணையின் வடிவுடையீர் என்மனையில் வந்தருளிற்று என்னுகும் என மொழிந்தார்; 10

ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம் வழிக்கரையில் நீர்வைத்த வாய்ந்தவளம்
தருகின்ற நிழல்தண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவும் கேட்டணைந்தோம் எனப்புகல்வார்.

இவ்வாறு கேட்கும் அப்பூதி அடிகளார்க்கு திருநாவுக்கரசர் சொல்வார் ஐயனே! யாம் ஒரு மேருமலையை வில்லாக உடைய பெருமானைத் திருப்பழனத்துச் சென்று வணங்கி வருகின்றோம்; வழிக்கரையில் நீர் வைத்த வளம் வாய்ந்து குளிர்தருகின்ற நிழலுடைய தண்ணீர்ப்பந்தரும் கண்டு அதைப்போன்று நீர் இன்னமும் செய்கின்ற அறங்கள் பிறவும் கேட்டு உம்மைக் காணும்படி வந்துள்ளோம் எனச் சொல்பவர் பின்னரும் அவரை நோக்கி, 11

ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்?
கூறும் என எதிர்மொழிந்தார்கோதில்மொழிக்கொற்றவனார்.

ஆறணியும் சடைமுடியுடைய பெருமான் அடியார்க்கு எனநீர் வைத்த ஈறில்லாத பெரும் திருவுடைய தண்ணீர்ப்பந்தரில் உமது பேரை எழுதாது வேறொரு பேர் முன்னாக எழுதவேண்டிய காரணம் பென்ன கொல்லோ! நீர் கூறும் என்று நேரிட்டு அப்பூதியார் கொள்கைக்கு எதிர்மாறாகக் கேட்டனர் குறைவிலாத மொழிக்கரசர் எம்பிரான் திருநாவுக்கரசர். 12

நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
நன்றருளிச் செய்திலிர்! நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர்? எனவெகுள்வார்.

அதனை அங்கு நின்ற அந்தணர் பெருமான் அப்பூதியார் கேட்டலும் உடன் தான்கொண்ட உறுதியின் அறிவுகலங்கி மனமுடைந்தவராய் அவரை நோக்கி ஐயனே! இதென்ன இது நல்லதொரு வார்த்தை உம் வாயால் நீர் சொல்லவில்லையே! நாணம் இல்லாது கொடிய சமணப் பாதகருடன் சேர்ந்து ஒருங்குடன் செயல்பட்ட அரசனின் சூழ்ச்சியை தமது திருத்தொண்டில் உறைப்பாலே வென்றவரான பெரியோர் திருநாவுக்கரசரின் நாமத்தையோ நீர் வேறு ஒருபேர் எனச்சொல்வது? என்று பதட்டமுடன் கோபங் கொள்வாராய் மீண்டும்; 13

நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ரும்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர் எழுத
வெம்மைமொழியான்கேட்க விளம்பினீர் எனவிளம்பி.

நம்மையுடைய எம்பெருமான் திருவடிக்கீழ் நயந்து புரியும் திருத்தொண்டின் செயலால் இந்த உலகத்தில் நாம் தப்பிப் பிழைக்கலாம் என்று என்போல்பவரும் தெளிந்தறியச் செம்மையான தொண்டு புரிந்து காட்டிய திருநாவுக்கரசர் பெருமானின் திருவுடைய பெயர் எழுதிட ''வேறொரு பேர்அது வென்ற,,கொடும் மொழியினை இன்று உம்மிடம் இருந்து யான் கேட்க நீர் சொன்னிரே என விறுவிறுப்புடன் மொழிந்து 14

பொங்குகடல் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே;
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாம்யார்? இயம்பும் என இயம்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிடும் கடலிலே கட்டிய கல்லினுடன் மிதப்பில் போந்து கரையேறிய அவர் பெருமையை நெற்றியில் கண்கொண்ட எம்பெருமானது இந்த உலகில்யார் அறியாதவர் உளர். அஃதிருப்ப மங்கலம் நிறைந்த இந்த திருவேடத்துடன் நின்று இவ்வகைநீர் மொழிந்தீர் எந்த ஊர் நீர் இருப்பது! நீர்தாம் யார்? உண்மை சொல்லிடும் என்றார் அப்பூதி அடிகளார்.

எவ்வளவுபத்தி எவ்வளவு உண்மை விளக்கம் தூயசிந்தை வஞ்சகமற்றநிலை இந்த அந்தண பெருமானிடத்துக் காணப்படுகின்றது. இவரின் கொள்கையின் சிலவற்றில் சிறிதளவாதல் இக்காலத்து அந்தணர் என்போர் கடைப்பிடிப்பாரோ? 14

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர் அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான் என்றார்.

திருவுடைய அந்தணர் பெருமான் அப்பூதியார் இது மொழிந்திடலும் திருநாவுக்கரசர் அப்பூதியாரின் பெருமை அறிந்து பதில் சொல்வார். நான்பற்றிய புறச்சமயத்தில் நின்ற கொடுமை நீங்கிக் கரையேறிட எனக்குத் தரப்பட்ட கொடும் சூலைநோயினால் ஆட்கொண்டிட ஆற்றாது அப்பனை வந்துஅடைந்து உய்ந்த இதுதான் வழிஎன முன் தெளியும் உணர்விலாத சிறுமை உடையேன் நான் என்றார். 15

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள் தாம்
கரகமலர் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகம லம்பூண்டார்.

திருநாவுக்கரச சுவாமிகள் தம்மை அறிய இவ்வண்ணம் உரைத்திடலும் அதுகேட்ட அப்பூதி அடிகளாரும் தனது கைமலர்கள் உச்சிமேல் குவிய, கண்களில் நின்றும் அருவிநீர் பாய்ந்து வடிந்திட மொழி குழறி உடம்பெல்லாம் உரோமம் புளகமாகப் பொலிந்திட இப்பூமியின் மீது வீழ்ந்து திருநாவுக்கரசருடைய திருப்பாதக மலர்களை உச்சி பொருந்த தம் கையால் அணைத்து வணங்கிக் கொண்டார். 16

உணர்ந்தவர்க்கு உணரவும் முடியாத நீதியும் ஞானமுமே முருகன்

வாரியார் பிரசாரம் செய்து வணங்கச் சொல்லும் முருகனை நாம் வணங்கோம். நம்மவரையும் வணங்கச் சொல்லோம். அவர் காட்டுவது நீதியற்ற கற்பனையில் மிகு பேதமை. அது பேதை மக்களை ஏமாற்றிப் பணஞ் சேர்க்கும் மிகப்பெரிய சாதனை. இதோ சில காரணங்கள்:

சர்வ உலகமும் தானாகச் செறிந்து நிற்கும் எம்பிரான் ஆறுமுகன் ஞானமயமாகியும் உணர்ந்தவர்க்கு உணரமுடியாத நீதி உடையவனாகவும் விளங்குகின்றான் என நாராயணக் கடவுள் தேவர்கட்கு எடுத்து உபதேசித்துள்ளதாக கந்தபுராணம் கூறுகின்றது. அந்த வாக்கியத்தில் ஒன்றே மேலேதரப்பட்ட கட்டுரையின் வாக்கியமாகும். ஆகவே நீதியின் வடிவாய் நிற்கும் கடவுள் நீதியின்மையை ஏற்கற்போவதில்லை. நீதியற்ற செயலை அருள் தன்மை என்று கொள்ளப் போவதுமில்லை என்பது தெளிவாகிறது.

இதனைச் சேக்கிழார் பெரிய புராணத்து வலிஉறுத்திச் சொல்கின்றார். அது தான் எம்பிரான் சிவன் பசுவிடத்துப் பெறும் பொருளான பால் தயிர் நெய் பசுச் சலம் பசுச் சாணம் எனப் பெறும் ஐந்தினையும் தாம் விரும்பி அதனால் நீராடப் பெற உவப்பவர். ஆனால் அவ்வாறு நீராட உவக்கும் கடவுளுக்கு ஓர் ஊர் மக்கள் கொடுப்பது யாது என்றால் தருமமாக நடத்தலும்; நீதியாக வாழ்தலும் சால்பாய நிலையால் தாழ்வுற்றோரை மேல் நிலைப்படுத்த முயற்சித்தலுமாய மூன்றினையும் கொடுக்கின்றார் என

ஆன் ஐந்தும் உகந்து ஆடுவார்க்கு அவ்வூர்
தான் அளிப்பன தருமமும் நீதியும் சால்பும்

என ஓர் நாட்டு மக்களின் சிறப்பை வர்ணிக்கும் பொழுது கூறுகின்றார்.

சேக்கிழாரது இந்த வாக்கை உணரப்போனால் நீரால் பூவால் வழிபடுதலிலும் தருமமுடன் வாழ்தல் நீதியுடன் வாழ்தல் சார்புணர்ந்து சால்புடன் வாழ்தல் இவையாவும் மேம்பட்டன எனவே கொள்ளப் படுகின்றது. நீதி அற்றவர் செய்யும் வழிபாட்டை இறைவன் ஏற்கான். அதனைக் கண்டு நாணி நிற்பவன் என நாவுக்கரசர் சொல்கின்றார் அதனை

பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு
நிற்பன் நாணி அவர் தமையே

என தமிழ் மறையால் சொல்கின்றார்.

தொண்டு செய்வார் கூலி பேசிப் பின் தொண்டு செல்தல் தொண்டு என்ற அதன் சிறப்பியல்பிற்கு நீதி உடையதன்று. அத்தகைய செயல் மிண்டு எனப்படும். மிண்டு என்பது ஆசைப் பெருக்கம். மிண்டு மனத்தவரை மேல் நிலைக்கு கொண்டுவரும் நல்லூர்த் தேரடி என யோக சுவாமிகள் தமது குரு இருந்த தேரடியைச் சிறப்பிக்கின்றார். யோகசுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகளின் வாழ்வை இன்று தொண்டு என்று பிரசாரம் செய்வார் உணர்தல் நன்று. தொண்டு செய்வார் கூறிய நிபந்தனை எதுவும் இன்றித் தொண்டு செய்தார் என்பதை நடுக்கத்துள்ளும் நகையுளும் நம்பர்க்கு கடுக்க கல்லவடம் மிடுவார்க்கு என வரும் திருநாவுக்கரசர் தேவாரம் காண்க. இன்று பெரும் கும்பாபிஷேகங்கள் யாவும் தொண்டு என்ற போர்வையில் கட்டுக் குத்தகையாபாரமாக நடப்பதைக் கண்ணாரக் காண்கின்றோம்.

திருஞான சம்பந்தர் சடாயு சம்பாதி என்னும் இரு புள்ளரசரின் வழிபாட்டைச் சொல்லுமிடத்து வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப் போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூர் என்கின்றார்.

இன்றைய சைவசமயப் பிரசாரகரின் போக்கை அவதானித்தால் அவருடைய பிரசாரம் பொருளை வரும்படியை முன்வைத்தே தொண்டு பின்னணியில் நிற்கிறது. வாரியாரது முன் கூலி நிபந்தனை பற்றி நோக்கினால் அது ஒரு சமய ரீதியில் அருவருக்கத் தக்க நிகழ்ச்சியாகவே அமைகிறது. அவர் தமது பேச்சின் திறனை வியாபாரமாக்கிக் கொ[illegible] அவர் பேச்சில் மயங்கும் சிலர் அவரில் சில சித்துக்கள் கண்டோம் என்கின்றனர். அதனால் அவரைப் பெரியவர் எனகின்றனர்.

இதற்கு ஓர் உதாரணம் நாம் காட்டுதும் எமது கிராமத்தில் முருகன் அருள் பெற்ற பெண்மணி நினைத்த காரியம் சொல்லுகின்ற மிகப் பெரியவ என்றெல்லாம் மொழியப் பெற்று அப்பெண்ணின் தேவதை வாலாயத்தால் பலர் அங்கு செல்வது உண்டு. பலரும் அப்பெண்ணின் சிறப்புப் பற்றி பேசுவார் அங்கு அவரின் பெருமையால் ஒரு முருகன் கோவில் கட்டி அதற்கு தனியனை ஒலி பெருக்கி ஒலிப்பதிவு நாடா முதலியபோடும் வானொலிப் பெட்டி முதல் அனைத்தும் உண்டு. பலர் அங்கு வந்து போவதும் உண்டு. இப்படியாக இருக்கும் நேரத்தில் ஒரு நாள் தூர தேசத்தில் இருக்கும் எனது நண்பர் அங்கு வந்து வாய்தல் முன் நின்றார். அவரை நோக்கி என்ன நீங்களும் இங்கு கும்பிட வந்திருக்கிறியள் எனக் கேட்டேன். அப்போது அவர் என்னை நோக்கி இல்லைப் பாருங்கோ எங்களுக்கு இங்கு வர வேண்டி ஒரு சங்கடம் வந்திட்டது. அதனால் வரவேண்டி வந்துள்ளது என்றார். என்னபாருங்கோ அப்படியாயின் ஏதன் சாத்திரம் கேட்க இங்கு வந்தியளோ? என்று பதில் அவரை விசாரித்தேன் அவர் சொன்னார் இல்லை எங்களது பெட்டை ஒன்றை ஓர் இளைஞன் களவாகக் கூட்டிக் கொண்டு வந்திட்டான். பிள்ளை இங்கு இருக்குது முருகனும் சடங்கு செய்யச் சொல்லி அநுமதி கொடுத்திட்டாராம். இந்தச் சங்கடத்தால் எங்கள் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போறதற்கு வழி தெரியாமல் திகைத்து நிற்கின்றோம். நான் வேடிக்கையாகச் சொன்னேன் சடங்கு செய்ய அநுமதி கொடுத்த முருகனையே நீங்களும் உங்கள் பெண்ணைக் கூட்டிக்கொண்டு போக வழியைக் கேளுங்கள் எனக் கூறி அப்பால் போனேன். ஆனால் கந்த புராணத்து கச்சியப்பர் காட்டும் நீதியின்வடிவான எம்பெருமான ஒரு போதும் இத்தகைய செயலை அநுமதியார். இவைகள் எல்லாம் சிறு தேவதைகளின் வாலாயப்பெருக்கம்.

இன்று எமக்கு ஒரு கண்டனக்கடிதம் 6 பக்கத்தில் எழுதப்பட்டு அனுப்பியுள்ளார் சிவராசா கிருஷ்ணமூர்த்தி எனப்பெயரிட்ட இருவர். அவ்விருவரும் வண்ணைவாசிகள் எனக் குறிப்பிட்டிருந்தார்கள். அதனைத் தைரியமிருந்தால் பிரசுரித்து பதில்தருமாறு கேட்கப்பட்டிருந்தது அதில் இரு முக்கிய விடயங்களை குறிப்பிட்டிருந்தனர். ஒன்று முதல் நாலு பக்கத்தில் தேவாரம் அதனை இன்று யார் படிக்கப் போகின்றனர் அதனை ஏன் புரிகெட்டு எழுதி கடதாசியைப் பழுதாக்குகின்றீர்கள் என்றும் அடுத்த 4 பக்கத்தில் என் அழுகையைத் தாங்கள் படிப்பதாகவும் அதில் திருமுருக கிருபாணந்தவாரியார் முதல் பலசமயத்தலைவரையும் கண்டிப்பதாகவும்; சிவத்தமிழ் செல்வி சவுக்கார முதலாளி என நாம் குறிப்பிடும் அப்பெரியார்களால் தான் சமயம் வளர்கின்றது என்றும் அதைநான் பழுதாக்க முற்படுகின்றேன் என்றும் இளைஞர்பலர் என்நிலையை உணர்ந்துள்ளனர் என்றும் தொடர்ந்தும் அவர்களுக்கு கண்டனம் தெரித்தால் என்பத்திரிகையை இனிவெளிவரச் செய்ய முடியாத நிலையைத் தாங்கள் செய்வார் என்றும் இன்னமும் அந்தணர் எல்லாரும் சரியாய் நடக்கின்றனர் என்றும் ஒன்று இரண்டு பிழை இருந்தால் எல்லாரும் பிழையோ என்றும் இப்படியாக பலகேள்விகள் எழுப்பியதால் அக்கடிதம் உண்மைப் பெயருடைய சிவராசா கிருஷ்ணமூர்த்தியல்ல இவர்கள் தீபத்தின் வெளிச்சத்தில் தங்கள் பாதகச் செயல்கள் அம்பலமாகக் கண்டு பயந்து நம்மை வருத்தியாதல் அன்றி உடற்தீங்கிடுதலினுதல் என்பத்திரிகைப் பணிக்கு இன்னல் விளைவிக்க எண்ணும் பாதகர் சிலரின் மாற்றுக் கையெழுத்தாகும். என உணர்ந்தேன். அவர்கள் கடிதமும் எனக்கு ஒரு நன்மை செய்தது. எதுவெனில் திருநாவுக்கரசரது தேவாரம் முற்பக்கத்தில் தரும் பொழுது எமது குருபரன் முருகனை நம் முனிவனை கந்தபுராணத்திலிருந்து சில நன்மொழி சொல்லி கட்டுரையாய் போற்றுபவன். உண்மையில் இம்முறை அதை மறந்திருந்தேன். திருமுருக கிருபாணந்த வாரியாரைப்பற்றி என் பத்திரிகையில் எழுத எனக்கு என்ன அருகதை இருக்கின்றது என்றதால் எடேய் உதென வில்லங்கம் என்று நினைந்தபோது தான் என் அப்பன் ஆறுமுகனை நினைய வைத்தது. ஆதலாலே வாரியாரது உலகப் புகழையும் கந்தப்புராணத்து முருகக் கடவுளின் உயர்வான பெருமையையும் முருகனது உண்மை நிலையையும் உலகிற்கு காட்ட இக்கடிதம் [illegible]க அமைந்தது. உடனாக என் உள்ளத்து மேலே தரப்பட்ட கந்தப்புராணப் பாடலின் வார்த்தை தலையங்கமாக எழுந்துகொண்டது. ஆதலின் நம்மீது வசைமொழியும் கடிதமும் நமக்கு நன்மையே செய்தலால் சிவனடியார்க்கு தீமையும் நன்மையாம் எனும் திருநாவுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரசர் வார்த்தையை அனுபவத்திலும் கண்டேன். உண்மையில் திருமுருக கிருபாணந்த வாரியாரைப் பற்றி எழுத எனக்கு அருகதை இல்லை எனெனில் அவரது முருகன் அவருக்கு உலகம் போற்றும் பல சிறப்பு கொடுத்துள்ளான்? அவர் பெயர்ப்படியே முருகனிடம் பல ஆனந்தங்களை வாரிக்கொண்டவர் எப்படி வாரினூர் என்பது அதிசயித்தின் மேல் அதிசயம். அப்படியானவரை எங்களுடைய பிராமணரையும் பலதொழிலாலும் வாரி பணம் சேர்த்து பசித்தார் கேட்டால் இன்றில்லை நாளை எனச் சொல்லி எங்கள் காசில் எதுவும் செய்வோம் கோயில் என்றால் எங்கள் திருவிழாவின் எழுப்பத்தைக் காட்ட வேண்டுமென பலமுதலாளிகளை அதற்கு வாரிவழங்க முருகன் அருளால் படைப்பிக்கப்பட்டவர். இதுவன்றி சினிமாவில் நடிப்பதற்கு ஓர் சுவாமியாக பிரகடனம் செய்யப்பட்டவர்; வானொலியில் மதிப்புடைய பேச்சாளராக்கப்பட்டவர். அவரால் இருக்கும் அருள் களவெடுததவன் பயத்தில் போட்டகாசும் தன் முருகனை கும்பிட்டார்க்கு கை கெட்டும்படி செய்யுவல்லவர் இதை உறுதிப்படுத்த சினிமாவிலும் நடித்துக் காட்டியவர்.

அடுத்து இலங்கை வரும் போது சமயப் பெரியவர் பிரசாரத்திற்கு போனூர் என எழுத வைச்சான் இங்கு வந்த றேட்டுடன் பெருவாரி பொருள் திரட்டவைச்சான் அதை அரசு அறியவோ அறியாமலோ தெரியாது பக்குவமாய்த் தன் ஊர் போய் சேர வகை செய்தான் ஒரு குறை மட்டும் அவருக்கு புத்திர பாக்கியம் கொடுத்தானோ தெரியாது.

ஆகையால் அவரது முருகன் அருளால் அவர் பெரியவராய் விளங்குகிறூர். அவரைப் பற்றி எழுத எனக்கு ஒரு அருகதையும் இல்லை. அதே ஒரு பழி. அதை ஏற்கிறேன். அவர்க்கு இப்படியெல்லாம் கற்பனையால் சிருட்டிக்கும் செயல்கட்கு பிரசாரங்கட்கு உதவியாய் இருக்கும் முருகனை எக்காலமும் நான் வணங்கேன். நான் அதற்கு அருகதையுடையவன் அல்ல. எனது கொள்கைக்கும் வாரியாரது கடவுள் கொள்கைக்கும் எட்டாப் பொருத்கம்.

இன்று வாரியார் பிரசங்கம் செய்த மஞ்சவனப்பதிக் கோவிலை எடுத்துக் கொண்டால் அது வழிபாட்டுக்குரிய கோவில் அல்லாது சிலருடைய விளம்பரத்திற்குரிய கோவிலாக அமைந்து விட்டது. அங்கு அமைதியோ சாந்தமோ எக்காலமும் இனிமேல் பெறமுடியாத நிலையில் அக்கோவில் நிலவந்துள்ளது. வாரியார் கற்பனைப் போதனை ஏதும் பயனளிக்காது அது மேன்மையுடைய சைவ நீதியைக் கீழ்மையாக்கும் என்பதற்கு இக்கோவிலில் நடக்கும் சில செயல் நற்சான்று பகர்கின்றது தவத்திற்கும் நீதிக்கும் தான் அமைதியும் சாந்தமும் நன்மையும் விளையும் என்பதை நம் மக்கள் உணரும் தனையும் நாட்டில் துயரமே பெருகும்.

கந்தபுராணம் ஓதியாகியும் உணர்ந்தவர்க்கு உணரவும் ஒண்ணு நீதியாகியும் நிற்கின்றான் முருகன் என்றால் பிரசாரம் என்று இங்குவந்து ஓரிடத்தில் றேட்டுடன் பேசி பொருள் சேர்த்து அங்கு கொண்டுபோனால் அது நீதியுடைய பிரசாரமோ? சொல்லுங்கள். களவெடுத்துவிட்டுட்டு ஓடியவன் காசு எடுத்தது முருகன் அருள் என்றால் அது நீதியுடைய பிரசாரமோ? சொல்லுங்கள். ஆனதினால் உலகமக்கள் அவரை பெரிதென ஏற்கும் வகையில் நான் அவர் நிலைக்கு அருகதை உடையேன் அன்று.

அதைத்தான் உலக மக்கள் எதை விருப்புவார் என்பதை திருவாசகமூலம் மாணிக்கவாசகர் சொல்லி தன்னைப் பற்றி உலகம் என் நினைந்தது என்றதை மருளாமனத்து ஓர் உன்மத்தன் வருமால் என்று இங்கு எனைக் கண்டார் வெருளாவண்ணும் மெய் அன்பை உடையாய் அருளவேண்டுமே என்கின்றூர். அடுத்து அருணகிரியார் ஓர்திருப்புகழில் திருக்குருந்தடி பெற வரம் அருளிய குருநாதர் எனப் போற்றி பின் வரும் அநுபூதியில் முருகன் குமரன் குனி நம் குரு என்று உருகும் செயல் கொண்டு உணர்வு என்று ஒழிவேன் எனச் சொல்லுதலால் திருக்குருந்தடி பெற்றவர் மாணிக்கவாசகர் அவர் வழி தனக்கும் எய்தியது என்கின்றூர்,

சந்திர தீபம் என்றால் முருகன் அருள் என்பதை எம் மக்கள் உணரும் அன்று நாட்டின் விடுதலைக்கும் சைவநெறிக்கும் அத்திவாரம் இடப்பட்டது என்பதை ஆரும் உணருங்கள்.

சைவசித்தாந்தத்தில் சீவபூசையோ சிவபூசையோ சிறந்தது

சீவ பூசையோ சிவ பூசையோ சிறந்தது என தீபமூலம் கருத்து தெரிவிக்கலாமா எனக் கேட்டார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் க. சுப்பிரமணிய ஐயரவர்கள். ஆதலின் அவர் கேட்டமைக்கிணங்க சிறுவார்த்தை சொல்ல முற்படுகின்றோம்.

சீவ பூசை என்றால் யாது? அது தான் உயிர்களில் இறைவன் இருக்கின்றான் என உணர்ந்த கொள்கையுடைய சைவ சித்தாந்தத்து நெறியில் உயிர் பால் அன்பு செய்தலும் அவர் வேண்டப்படும் பணி புரிகின்றதும் சீவ பூசையாகும். அப்பணிதான் உணவு இல்லார்க்கு உணவு. உடை இல்லார்க்கு உடை, நோய் உற்றூர்க்கு மருந்து; தாக சாந்தி முதல் பல வகையான பணிகளாகும். இவையும் இவை போன்ற உயிர் வாழ்விற்குரியனவும் சீவ் பூசை எனப்படும்.

சிவபூசை என்பது தன்உயிர்க்கு உயிராகிய இறைவனை ஓர் மூர்த்தியில் எழுந்தருளப் பண்ணி பூவும் நீரும் கொண்டு இறைவன் அருளினைப்பெற ஆகம முறைப்படி பூசித்தலாகும். இவ்வகை சிவபூசை வழிபாடும் சைவசித்தாந்த நெறிக்குரியதாகும்.

இவைகளில் முன்னதோ பின்னதோ சிறந்தது எனக் கேட்டால் அதற்கு எம் நாயன் மார் பாடிய தமிழ் வேதம் முதல் பன்னிரண்டு திருமுறைகளினூலும் அவை நீங்கிய உண்மை உணர்ந்து அநுபூதி பெற்ற மகான்களது அநுபூதி வாக்கியங்களாலும் நாம் அறிந்த அளவில் உங்கட்கு எடுத்து மொழிகின்றேன்.

முதற் கண் சைவ சித்தாந்தம் என்றால் என்ன? அதை விளக்கிட இப்பத்திரிகை 7 வது பக்கத்தில் சிறிது சொல்லியுள்ளேன். அடுத்து வேதாந்தம் என்றாலும் எந்த அந்தமுடையதான சமயம் என்றாலும் எல்லாம் இறைவன் ஒருவன் உளன். என்று அதன் இயல்பு பேசுகின்றன; கடவுள் இல்லை எல்லாம் இயற்கை என்பார்க்கு ஏதும் இல்லை. அவர் போக்கை நாம் திருத்தி அவர் விளங்கிட வைக்க முடியாது.

இப்படியாக நம் சமயநிலையில் சைவசித்தாந்தக் கொள்கையில் பதி பசு பாசம் என்னும் மூன்றும் தெளிவு பொருள். உலகங்களும் மற்று உலகமெங்குமுள்ள பொருள் யாவும் பதியுடையது. அது அறியப்படாதது. பசுவாகிய உயிர் அது அநாதியே உள்ளது. அதுவும் இறைபோல அழிவற்றது: பாசம் இவ்வுயிரைப் பந்திப்பது. பாசத்தின் வினைவால் உயிர் மீளமீளப் பிறந்து இறந்து வரும் நிலையில் என்றோ ஒரு நாள் இறையருளால் நல்நிலைப்பட்டு பதியினுடன் கலந்து பேரானந்தம் பெறுகிறது. இதுவே சித்தாந்தநிலை. இப்படியாக ஒரு நாள் யோக சுவாமி எனக்கு சொல்லி இவ்வளவும் தான் உண்மை. மற்றதெல்லாம் படித்தவனுடைய வெருட்டு. அதில் நீ மலையாதே: நீ கடவுளை அடைய விரும்பின் முதற்கண் உயிரிடத்து அன்புகொள். அவர்கட்கு நல்லன செய்யக் கூசாதே; தருமத்தை மறவாதே. தருமத்தின் அடிப்படையில் நின்றுதான் கடவுளைத் தேடிப்பார் தென்படும் எனச் சொல்லாமல் சொன்னூர்.

அடுத்து இந்த தருமம் இல்லாதவர் யாவரும் சைவசித்தாந்திகள் அல்லர் எனலாம். எமது ஞானிகளான ஞானசம்பந்தர் முதல் அனைத்து நாதாக்களும் அவர் பெருமை போற்றும் பெரியபுராணம் கந்தபுராணமும் எல்லாம் எல்லார்க்கும் முதற்கண் தருமத்யையே வலியிறுத்தின: சிவதீட்சை பெறுவதிலும் ஒருவர் தருமவிளக்கம் பெறவேண்டியது: தருமம் என்றால் யாது? அது தான் பிறஉயிர் அல்லல் படுவதைக் கண்டு இரங்குவது: அதற்கு அதன் துயரம் நீங்க தன்னால் ஆனவகை துணைபுரிவது. அதுமுடியாத காலத்து தானும் அவ்வுயிர்போல் வருந்தியதால் இருப்பது. இதுதான் உண்மையான சைவசித்தாந்தம்.

வெறும் சாத்திரம் நமக்கு பிரயோசனவற்றது. சாத்திரங்களும் பிறநூல்களிலும் தருமத்தை அடிப்படையாகக் கொள்ளா திருப்பனவேயாயின் அவைகளைக் கற்றுக் காலம் கழித்தல் அது வீண்காலமாகவே போகின்றது: இதைத்தான் திருநாவுக்கரசரும் ஓதியே கழிக்கின்றீர்கள் உலகத்தீர் ஒருவன் தன்னை நீதியால் நினையமாட்டீர் எனக்கேட்கின்றூர். நீதி என்றதே இங்கு தருமமாகிறது: தருமம் இல்லாவழி நீதியும் இல்லை தருமத்திற்காகவே நீதிவருகுது என்பதை விளங்கவேண்டும். தருமம் தான் அன்பிற்கு வித்து. இந்த அன்புதான் பின்னர் அருளுக்கு இடமாகின்றது என கந்தபுராணம் உறுதி கூறி அருள்பெற்ற பின்தான் தவமும் கைகூடும் என மொழிகின்றது. இன்றைய தபோதனர்கள் இதைத் தெளிந்தால் மிகவும் நன்று. வேடம் காட்டி இனியமொழி காட்டி பலவேடிக்கைக் கதைபேசி சிரிக்க வைத்து பணமும் பெற்று பக்குவமாய் போய்ச் சேரும் அவர்கள் முதற்கண் இதை உணர வேண்டும்.

மேடையில் பேசும் இப்பேச்சு வயிற்றுப் பசிப்பிணி[illegible] மக்களுக்கு உதவுமா? மட்டக்களப்பில் சூறுவளியினுல் தாக்கப்பட்டு பொருள் இழந்து வீடு இழந்து கையில்பற்றிய குழந்தையும் காற்று தூக்கி எறிய அல்லலபட்டு பசிப்நோயால் வருந்திய மக்களுக்கு இன்பம் எங்கே இன்பம் எங்கே தேடு முருகா உனக்கு குறையும் உளதோ? வேலைப் பிடிச்சது என்ன பிடிச்சது என்ன என்ன எல்லாம் அ ஆ அ ஆ என்று ஆட்டுவது உதவுமோ இவை இங்கு மாவிட்டபுரத்தில் மழையில் நனைந்தாலும் கேட்டார். அடுத்து சிவத்தமிழ் பாராட்ட தம்பிரான் பின் நிற்ப அவை நடக்கலாம். ஆனல் பாட்டுக் கேட்டு வீடுபோய்ச் சோந்த வரும் வயிறுகடிக்கும் போது முருகா உனக்கு குறையும் உளதோ என சொல்லித் தாமும் அம்மெட்டில் பாடிவிட்டுப் படுத்திருப்பாரா? இல்லை என எண்ணுகின்றேன். அப்படி முருகனது பாட்டு இன்றைச்குக் கேட்டனுன் இரவுக்கு விரதமாய் இருப்போம் என எண்ணியதால் தம் உணவைக் கைவிட்டிருப்பாரா? நான் நினைக்கவில்லை. அல்லது பாடிய அம்மைகட்கு சுவாமிகட்கு ஒன்றுக்கும் வழியிலாது மாவைமட்டும் வேண்டி பிட்டவித்து பிள்ளைகட்கு பற்றியும் பற்றுமலும் பகிர்ந்து கொடுத்து தானும் படுத்து உறங்கும் தாய்போல் உணவு பரிமாறப்பட்டிருக்குமா? வாரியாருக்கு கொக்குவிலில் ஒருவீட்டில் நடத்தப்பட்ட உணவு விசேடம் எங்கள் யாழ்ப்பாணத்து காணப்படும் சுவர் குடிசை வீட்டில் மானமுடன் ஒழுக்கமுடன் தம் வறுமையையும் பிறர்க்கு பேசாதபடி அடக்கமுடன் வாழும் மக்களிடத்து தம் வாழ்நாளில் ஒருநாளாகுதல் உண்டிட வகவருமா? நான் நினைக்கவில்லை. ஆதலினூல் எம் ஞானிகள் இறைவன் அருளை எங்கு காணுகின்றூர் என்றால் உயிர்கள் இடத்து; உயிர்கட்கு நிகழ்த்தும் சேவையால் காண்கின்றூர்கள்.

இந்த ஒரு நிலையில் திருநாவுக்கரசர் தன்னையே நொந்து கொள்கின்றூர். எப்படி ''இரப்பதே ஈயமாட்டேன் என்கின்றூர். அடுத்து இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார் எனக்கூறி மக்கள் பசியால் வாடிவேண்டிட அப்போது இல்லை என்று கரம்பார்க்கு எல்லாம் கடுநரகங்கள் வைத்தார். எனவும் கூறி ஈதலின் பெருமையை விளக்குகின்றூர். இதனை சிவபூசை செய்வாரும் உணரவேண்டும்.

அடுத்து எம் யாழ்ப்பாண நாட்டில் எத்தனையோ குடும்பங்களில் கணவன்மார் குடித்துவிட்டு வந்து வீட்டில் அட்டகாசம் செய்து மனைவியை அடித்து நொறுக்கி பிள்ளைகட்கு தான் அயலில் இரந்து சமைத்து வைத்த சாப்பாட்டைத் தான் சாப்பிட்டும்; இதனுல் மனமுடைந்து வாடும் மக்களை நாம் எம் யாழ்ப்பாணத்து காணவில்லையா? இப்படியாக இயற்கையால் இனக்கலவரங்களால் வாடிய மக்களை அருணகிரியாரும் தன் காலத்து கண்டிருப்பார் போலும்.

இப்படியாக மக்கள் வறுமையின் கொடுமை கண்டு வாடும் போது அவர் உள்ளமே உருகுகின்றது. உடனே முருகனிடம் ஓர் விண்ணப்பம் செய்கின்றூர். அது தான் முருகா என்னை நீ சாவதற்கும் பிறப்பதற்குமாகப் படைத்தாயே அன்றி தளர்ந்து வாடும் மக்கட்கு ஒன்று கொடுப்பதற்கு நீ என்னைப் படைக்கவில்லையே! நானும் வறுமையால் வாடுவேன் ஐயோ பொருள் இருந்தால் தளர்ந்தார் உளம் குளிர நான் ஆவன செய்யேனோ! என்ற வகை தளர்ந்தார்க்கு ஒன்று ஈகைக்கு என எனை விதித்தாய் இலை என தளர்ந்தார்க்கு ஈதலைச் சொல்வார். தளர்வார்க்கு ஈதலே வலி உறுத்தி ஐயோ உங்கள் உயிர் பிரிந்தால் தொலையாத வழி வரும். அந்த வழிக்கு பொதி சோறும் உற்ற துணையுமாகும் நீர் உண்ணும் போது தளர்ந்தார்க்கும் பகிர்ந்துண்டால் என்கின்றூர் இன்னுமொரு பாடலில் அருணகிரியார்.

பெரிய புராணம் முழுவதுமே அமுதூட்டலின் மாண்பைத் தெரிவிப்பது. பிறவியின் பயன் வழியிலார்க்கு உதவலே என சீவபூசையின் சிறப்பு மொழிவது. பெரிய புராணத்து நாயன் மாரது தொண்டு எல்லாம் அமுதூட்டல் ஆடைகொடுத்தலாய் விளங்குவன: அடியார்களைக் கண்டால் இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி இரண்டாட்டல் இல்லாது ஈசன் திறமே கண்டு பணி செய்யுங்கள் என்கின்றூர் திருநாவுக்கரசர்.

இதுவுமன்றி வெறும் பேச்சளவில் மட்டும் சிவபூசையை நாம் காணமுடியாது. அருணகிரியார் தமது பாடல் ஒன்றில் இதனைத் தெளிவுபடுத்துகின்றூர். முருகனுக்கு பூசையும் செய்து பிரசங்கமும் செய்யும் ஞானிகள் இந்த உடம்பு நீர்க்குமிழிக்கு நிகர் என்று சொல்வார் இது நில்லாது என்பர். கடவுள் அருளைப் பார்க்கும் போது முடிவிலாதது என்பார். ஆனல் பசித்து வந்து ஏதும் இரப்பார்க்கு கொடுக்க என்றால் எங்கேனும் தாம் போய் மறைய இருப்பார்: ஆதலின் வேற்குமரனுக்கு அன்பிலாதவர் ஞானம் மிகவும் நன்று என்றதால் பசித்து [illegible]தல் தான் வேற்குமரனுக்கு செய்யும் விசேட[illegible] இதனை உணர்ந்தால் சீவ பூசையோ சிவபூசையே சிறந்தது என நீங்களே தெளியுங்கள்;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ் அரசியல் தலைவர்களே தயவு செய்து நாம் சொல்வதை சிந்தியுங்கள்:

சந்திரதீபம் எனும் இப்பத்திரிகையை ஆரம்பித்துள்ளேன்: அதன்நோக்கம் யாதெனில் தத்திவற்கு ஓர் ஆற்றல் உணடு; அது ஆக்கத்தையும் உயர்வையும்தானே தேடித்தருவது. அவச் செயலிற்கு ஏதும் ஆற்றல் ல்லை; அது அவ்வப்போது மனமகிழ் வைத்தந்தாலும் முடிவில் மீளாத்துயரசதை வருவிக்கும் என உலகறிய எடுத்துச் சொல்ல துணிந்தமையாகும்

தமிழ் மக்களது அல்லல் தரும் நிலையை இன்று நோக்கிலைல் நாம் இவ்வழிதான் சிறந்தது எனக்காட்டிட துணியவேண்டி வந்துள்ளது. தவம் என்றால் யாது உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாகும். அவம் என்றால் உ மையிலா பலபோலிச் செயலானவிழாபாராட்டுஇடாம்பீகமுடைய வெறும்வேடிக்கைபெருக்கும் செயல்கள் அனைத்துமாகும். இவை அவ்வப்போது மனமலர்ச்சியை ஏற்படுத்தினும் முடிவுபெரும் துயர நிலையும் அல்லலும் தாமாக வருவிக்கும் ஆதலால் அவச்செயல் யாவும் அழிவிற்கே வித்தாவது. இதை அநுபவரீதியாக பெரியோர் உணர்ந்து நமக்கும் நூல்மூலம் சொல்லிப் போயினர். இன்று அநுபவரீதியிலும் அவற்றைக் காண்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு கோவில் தான் உயிர், அங்கு ஒழுக்கம் தான் உயிரினும் மேம்பட்டது அங்கு சாந்தி நிலவச் செய்தல் தான் மேம்பட்டது. அங்கு பூவும் நீரும் தான பிரதானம்,

அதை முன்னிட்டே மற்றைய எல்லாம் என்பதை நீங்கள் உணருங்கள். தமிழன் தனது உயர்வை தவத்தால் அடைந்தான் தவம் என்றால் சத்தியாக்கிரகம் அன்று. அவன் கொலை வஞ்சனை தந்திரம் நீதியின்மை இவற்றால் உலகை ஆண்டவன் அன்று தமிழன் அருள் கொண்டு ஆண்டவன். பொருள் கொண்டு படை கொண்டு அவற்றின் மேம்பாட்டால் உலகை ஆண்டவன் அன்று. அருளின வழியால் தமிழன் ஆண்டான் என்பதை

“மண் உலகம் காவல் பூண்ட உரிமையால் பல்லவர்க்கு திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும் பெருமையார் புலியூர் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றும் அன்றே.

என சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தமிழ்மறை மூலம் மொழிதலால் தமிழ் மக்கள் கோவிலை புனிதமுடன் பேணி வழிபட்டு இறையருளால் நன்குமதிப்புடன் சிறந்திருந்ததற்கு அவருடைய இந்த மறைவாக்கு தக்க சான்று பகர்கிறது. அவ்வாறு சிறந்திருந்த தமிழ் சமுதாயம் இன்று பலரும் காணும் படி அடிமையாகி தனது மொழி கலாச்சாரம் இவற்றை நெறிப்படி வளர்த்திட முடியாதபடி பகை மிகவும் நலிய பகைசெய்வாருடன் எதிர்த்திடவும் வகையறியாது பல பல துயர நிலை தொடர்ந்து தொடர்ந்து வரப்பெற துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இப்படியாகச் சிறந்திருந்த நம் சமுதாயம் தாழ்விற்றிருக்கும் காரணத்தை நாம் சுந்தரமூர்த்தி சுவாமிகளது தமிழ்மறை கொண்டு ஆராய்ந்தால் கோர்வில்களில் இறை அருள்பெறமுடியாத நிலையே வந்து கொண்டது என்பது தெளிவாகின்றது.

அருளின் வலியால் தமிழ் அரசர் ஏனைய அரசர்களின் நாட்டை அடிப்படுத்தினர் என பெரியபுராணம் நமக்கு அருளின் வழி காட்டும் வகை இப்படியாகவும் ஒருவார்த்தை சொல்கின்றது.

“அருளின் வலியால் அடிப்படுத்தார்”

எனக் கூறுகின்றது. அடிப்படுப்பது தன் ஆணைக்கு ஏனையரை இணங்கச் செய்தல் ஆகும்.என ஆகவே அருள் பெறறகுவழி யாது? அதுவே வம்.

திருக்குறள் மகாநாடுகள் பல நடத்தப் பட்டன. அங்கெல்லாம் சொற்பெருக்குகள் நிகழ்ந்தன. நீங்களும் தலைமை தாங்கி நடத்தி உள்ளீர்கள். அந்தக் குறள் என்ன போதிப்பது. அதைச் சிந்தியுங்கள். அது தான்

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்
தால் வரும் என்றதாகும்

இந்த ஒரு குறளை நனகு தெளிவுறக் கண்டு கொண்டால் அப்பால் பிறசெயல் வேண்டவே வேண்டா. அந்தக் குறளின் அர்த்த மென்ன அதனைச் சிந்தியுங்கள்.

அது தான்(ஒன்னார்த் தெறலும்) என்றது உன் பகை வரை அழித்தலும் அல்லது அழித்திட விரும்பிலும் அப்படி விரும்பினல் என்றது தாகும். அடுத்து (உவந்தாரை ஆக்கலும்) நீ விரும்பி மேல் நிலைப்படுத்த எண்ணும் மக்களை மேல் நிலையாக வைத்திடலும் என்றதாகும். [எண்ணில்] நீ செய்ய விரும்பில் அது எப்படிக் கை கூடும் என்றால் [தவத்தால் வரும்] தவம் செய்தால் வரும் என்கின்றார் திருவள்ளுவர்.

இதனைக் கந்தபுராணம் நன்கு வலியுறுத்தி பேசும் பொழுது

உடம்பினை ஒறுத்து நோற்பார் உலகெலாம் வியப்பவாழ்வார் அடைந்தவர்க் காப்பர் ஒல்லார்க்கு அழிவு செய்திடுவார் வெஃகும் நெடும் பொருள் பலவும் கொள்வர் நித்தராய் வாழ்வர் ஈது திடம்பட உமக்கு ஓர் காதை செப்புவன் கேண்மின் என்றார்.

என்கின்றது. இதன் கருத்து பின்வருமாறு

தனது உடம்பினை அதன் இச்சை வழி செல்ல விடாது தடுத்து நிறுத்தி கட்டுப் படுத்தி தவம் செய்வார் இந்த உலகம் எல்லாம் வியக்கும்படி வாழ்வார்கள்.

தான் விரும்பும் பெரும் பாருள் யாவும் பெறுவார் இது மட்டுமன்றி நித்தியராகவும் வாழ்வார்கள் எனவும் அதனைத் திடம் பெறுமாறு உமக்கு ஓர் கதை செப்புவேன் கேளுங்கள் என்றது பொருள்.

இதுவன்றி இன்னுமொரு பாடலின் மூலம் தவத்தினுடைய ஊற்றம் தான் ஒருவனது ஆயுள் கீர்த்தி செல்வம் புகழ் என்று பின்னரும் தவத்தின் பெருமையைக் கந்தபுராணம் வலியுறுத்துகின்றது. இதுவுமன்றி தவம் தானும் தவமுடையார்க்கே உரித்தாவது. அஃது இல்லார்கள் அவம் தான் மேற்கொள்வா.

இது நிலை இவ்வாறாக நம் கோயில்களை எடுத்துக்கொண்டால் தமிழன் சொல்லற்கரிய உயர்வுடன் இருந்த காலத்து நம் கோயில்கள் எல்லாம் தவநெறிக்குரியனவாக; அங்கு ஆகமம் சொன்ன வகையே அன்றி ஏனைய எவ்வகைக் கருமமும் நடைபெறுவனவாக இருந்தன. அந்த நெறியின் சீலத்தை பெரிய புராணம் நன்கு புலபபடுத்துகின்றது. கோவில் என்றால் வழிபட்டு தொண்டு செய்து உய்வு பெறும் நிலையமாக அமைந்திருந்தது.

நால்வரில் ஒருவரான திருநாவுக்கரசர பெருமானே தனது திருக்கையில் உழவாரம் கொண்டு கோவில் திருவீதி எல்லாம் செருக்கினர். என்றும் அவர் தமக்கை திலகவதியார் தம் திருக்கையால் கோவில் திருமுற்றங்களை கூட்டி மெழுகி இதுவன்றி பூக் கொய்து மாலைகட்டி இப்படியாகப் பல தொண்டுகள் செய்தனர். என பெரியபுராணம் சொல்கின்றது. அதுவன்றி கோவிலில் சென்று பஞ்சாட்சர செபம் தியானம் முதலிய செய்தார் மக்கள் எனவும் சந்தனக் காப்பிடுதல் நீராட்டல் தூபமிடுதல் விளக்கேற்றல் முதல் பல தொண்டுகள் புரிந்தனர் எனவும் அப்புராணம் கூறி அத்தொண்டால் அந்த அந்த அடியவர் முத்தி எய்தினர் எனவும் கூறுகிறது. இத்தகைய தொண்டுகள் யாவும் தவநெறிக்கு உரியனவாகக் கருதப்பட்டன. எனவே கோவில் தொண்டு தவமாகக் கருதப்பட்டது.

இதன் நிலை அன்று அவ்வாறுபின் இன்று கோவிலை எடுத்துக் கொண்டால் கோயிலில் திருவிழா என்ற போர்வையில் நல்நிலை எய்திய பெரியோர் அருவருத்து வருந்தத் தக்க செய டம் பெறுகிறது. பிரசாரம் என்ற போர்வையில் உண்மையற்ற வெறும் கற்பனை மூலம் பொய்யின் மூலம் எனலாம் தெய்வ தத்துவம் விளக்கப் படுகின்றது.

இன்று கோவிலிற்கு மக்கள் போவது திருவிழாப் பார்க்க பிரசங்கம் கேட்க வேடிக்கை பார்க்க என்றதேயாகியிருக்கின்றது. அடுத்து கோவிலில் பத்திமையுடன் கும்பிடச் செய்வார் அங்கு போய் மனம் ஒருமித்து சித்தம் ஒன்றி தியானித்து வழிபடமுடியாத படி ஒலிபெருக்கி அலறலும். வீதி முழுவதும் மண்டபங்களிலும் கடலை வியாபாரம முதல் வேறு வியாபாரம் எல்லாம் நிறையக் காணப் படுகின்றன இதனாலே கோவில் வழிபட்டு உய்ய என்றமை நீங்கி வியாபாரத்துறையாக மாற்றப்பட்டுள்ளது. கோவில் நிர்வாகமும் கோவில் புனிதம் கெட்டாலும் அதை எண்ணாது தம் விளம்பரத்தை வியாபாரத்தைச் செய்து பொருள் ஈட்டலையே புரியத் துணிந்து கொண்டன இதனாலே கோவில் என்றால் தமது சொத்து பிறர்க்கு உரியது அன்று என வந்து கொண்டது. இன்று கோயில்கள் எல்லாம் அவை இருக்க வேண்டிய புனித நெறி அற்று அவை சிலருடைய விளம்பர வியாபார கலை நிகழ் சி மண்டபமாகி விட்டன. இது உண்மை. நாம் ஏதும் மிகப்படச் சொல்லவில்லை. நீங்களும் இதனைக் காண்பீர்கள்.

ஆதலினால் கோவிலில் மேலே குறிப்பிட்ட அவமான செயலால் நாட்டில் துயரமே பெருகும் என செந்தமிழின் ஆகமம் திருமந்திரம் தெளிவுறுத்துகின்றது. இதனை முன்னவன் கோவில் பூசனை முட்டில் மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும் கன்னம் கொலை களவு கோள் மிகுத்திடும்என் அருள் நந்தி எடுத்துரைத்தானே என திருமூலர் தமிழ் ஆகமத்து மொழிகின்றார்.

இன்னாட்டில் இன்று இத்தனை செயலும் நடக்கவில்லையோ எம் அரசியல் நிலை தீங்கடைகின்றது. மழை ஒழுங்காக வளமுடன் பெய்வதில்லை. ஒன்றில் பெய்யாமல் விடுகின்றது. அல்லது பெய்யப் போனால் பெய்தே அழிக்கின்றது. இது வாரி (மழையின்) இயல்பு. அடுத்து ஒழித்து நின்று சுடுதல் எறிதல் களவெடுத்தல் கொலை பொய இவையாவும் எம் நாட்டில் என்றுமில்லாவகை தலைதூக்கி உள்ளது. இன்று வீட்டை விட்டு வெளியால் போறவர் திரும்பி சேமமாக வரலாமோ அல்லது வருவரோ என்ற வகையாக நம் நாட்டில் துயர நிலைகள் பெருகிக் கொண்டன. நீண்ட காலமாக நம்மிடமிருந்து வந்த ஒரு நம்பிக்கைநம் கோவில் நெறி தவறாது நடத்தப் பட்டால் தீங்கு நாட்டில் பரவாது என்பதே யாகும்,

பெரியபுராணத்தின் கருத்தை உணரப் போனால் பறவை முதல் மிருகமே நாட்டில் நீதியில் நின்றன. அந்தணர் முதல் யாவரும் தத்தம் நெறிகளில் நின்றனர். இல்லறத்து பெண்கள் விருந்தோம்பல் முதலிய பல செயலால் தருமத்தைக் குன்றாது வளர்த்தனர். இவையால் ஓதிய ஐந்தெழுத்தின் பெருமையால் நாட்டில் பிணிவர அஞ்சியது என்பதாகும்.

தவநெறி உடையனவாக கோவிலை ஆக்குவோம். அங்கு அவசிமான செயலான ஒலிபெருக்கி பிரசாரம் சினிமாப் பாடல் முதல் அனைத்தையும் நீக்கி வழிபாட்டுக்கு மட்டும் கோவிலை ஆக்குவோம். கோவில் பத்திமையைப் பெருக்குவோம். நம்நாட்டில் தீங்குகள் நீஙக இதுவே முதல் வழி.

கோவிலில் உயர்ந்த கொள்கைகள் நீக்கப்பட்டு சிறிய செயல் நடாதவாறு எல்லாம் கோவிலையும் நாம் அமைக்க முற்பட வேண்டும். பெருவாரி கோவில்கள் இன்று வியாபார நிலையமாக மாறி உள்ளன. கோவில்கள் புனிதமுடைய சுற்றாடலாக அமைய வேண்டும. அச் சுற்றாடல் மோவிலை வணங்கச் செல்வோரின் மனநிலையை பழுதாக்குமிடமாக அமைதல் ஆகாது.

இன்று பெருவாரி கோவில் எல்லாம் வீதி முழுக்க தேனீர் கடையும் சினிமாப் பாட்டும் ஐயோ இதுவும் இறைவன் இருப்பிடத்திற் குரிய இடமோ தவநெறிஉடைய இடமோ என சந்தேகிக்கும் வகை அமைந்துள்ளது. ஆகவே நம்நாடு உய்யவேண்டில் தமிழ் இனம் சுதந்திரமாக வாழவேண்டில் என்றும் கோவில்களில் புனிதமுடைய தவநெறி தழைத்திட வகை செய்யவேண்டும். நமது வார்த்தை சிறுமை உடையது என எண்ணவேண்டாம். நம் நாட்டில் நிலவிய செயலைக் கொண்டு நம் முன்னோர் தீங்கின்றி வாழ்ந்த வகைகளை சரித்திர மூலமாக உணர்ந்து கொண்டும் நான் துணிந்து இவற்றை உங்கட்கு வெளிப் படுத்தினேன். நாம் எல்லாவற்றின் முன் நம்கோயிலை சுதந்திரமாக வைத்திடற்கு தீங்கு நெறியை அங்கு முதல் அகற்றினால் சுதந்திம் நமக்கு இறையருளால் எய்தப் பெறும் என்பது என்மனத்துணிபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனக்கலவரமும் இயற்கை அழிவும் இனியும் ஏற்படாதிருப்பின் கோயிலிலாதல் நீதி நிலவுக

நீதி என்ருல் யாது? அது தான் எந்த உயிரும் துயரப் படாவகை வாழ்தல் வாழ முற்படுதல் என்றதாகும். தன்ருல் தன் செயலால் தன் வாகனம் முதல் நூதனப் பொருள்களால் பிறர்க்கு இன்னல் விளையாத வாறு நடந்து கொள்ளலே நீதியாகும்.

நாம் அனைவரும் சைவசித்தாந்திகள். சைவசித்தாந்தம் என்ருல் யாது? அதை நன்கு விளக்கி திருஞானசம்பந்தர் சொல்கின்ருர் தமது ஒரு தேவாரத்தில் அது இதுவாகும் அவர் ஓர் கோவிலைப்பற்றிக் கூறும் பெழுாது; இது ஒரு கோயில் இந்தக் கோயிலில் யார் இருக்கின்ருர் என்ருல்

"உரை சேரும் எண்பத்து நான் நூருயிர யேம்னி பேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய் ஆங்காங்கே நின்ருன் கோயில் என்கின்ருர்.

ஆம் இவர் வார்த்தையை இப்பொழுது யாவர்க்கும் விளங்கிக் கொள்ள வேண்டும். இயல்பாக அவர் வார்த்தை விளங்குகிறதே! அதாவது இந்த உலகில் வாழும் எந்த ஒரு உயிரினத்தையும் படைத்து அதன் அதன் உயிர்க்கு உயிராக நின்ற கடவுளின் கோயில் தான் இது என்ற வாருகும்.

ஆதலின் இது தான் சைவசித்தாந்தின் அடிப்படைத்தத்துவம் எல்லா உயிரிடத்தும் கடவுள் இருக்கிருர் என்றதேயாகும். இதை உணராதவன் சைவசித்தாந்தி அல்ல. அவன் வேறு வேதாந்தியோ வேற்றுச் சமயத்தவனுகி விடுவான். இந்தக் கொள்கையை வலியுறுத்தி நாயன்மார் பின்ருல் வந்த ஔவையார் என் சொன்ருள் என்ருல் நீ கடவுளைக் காண ஆசைப்பட்டாயோ? அப்படி நீ ஆசைப்பட்டால் ஒரு வழி உண்டு. நான் உறுதியுடன் சொல்வேன் கேள்! அவை தான் எல்லா உயிரையும் நீ கடவுள் எனக் கருது. அப்படிக் கருதி நீவாழ முற்படின் உன்னிடம் கடவுள் நிலைத்து நில்லாருே பார்ப்போம். என்றும் அடுத்து மாசில்லாத கொள்கையை மனத்தில் அடக்கிருல் உனது உடம்பே கடவுளைக் காட்டும் நீ பயப்படாதே என்றே. கூறுவதால் யாரும் எமது சித்தாந்த கொள்கையின் உயர்ந்த இலட்சியத்தை விளங்க வேண்டும்.

நாம் உய்ய அடியார் செயல் வாய்ப்ப சைவநெறி மீண்டும் உயர்வுடன் நெறி தழைத்திட உலகில் அவதரித்த யோக சுவாமிகள் கருத்தும் இதுவேயாகும். அவர் தவ வாழ்வும் இந்த அடிப்படையிலேயாகும். அவர் ஒருநாள் யாழ்ப்பாணத்து கம்மியூனிச கட்சியின் பிரபல தலைவராய் விளங்கிய ஒருவரிடம் சொன்வர், இங்கு பாரும் காணும் உங்கள் கம்மீனிச கொள்கையில் சமரசம் எங்கள் சைவ சித்தாந்தக் கொள்லகக்கு கிட்ட நிக்க முடியாது. சைவ சித்தாந்தம் எல்லா உயிரினமும் அன்பு அறம் இவற்றை உணர்ந்து வாழவழி செய்வது என்ருராம்.

ஆதலிருல் எமது சைவசித்தாந்தக் கொள்கையின் அடிப்படையை விளங்கிருல் விடயம் அங்கால் மிகவும் சுலபமாகின்றது.

இந்தக் கொள்கையை இன்னமும தெளிவு படுத்துகின்றது கந்தபுராணம். முருகக் கட ளின் திருவாக்காக அது என்ன சொல்லுகின்றது என்ருல் நான்கு முகமுடைய பிரமதேவர் முதலாக உள்ள தேவரும் முனிவரும் போன்று மேன்மையுடன் இருக்கும் அசுரர்களாகும் பெரும் கூட்டத்தினரும்; எங்கள் நாயகரான சிவபிரான் அருளால் தோன்றிய உயிர்களான சிவன் அருள் நெறியராக இருந்தாலும் கொடியவர்களை முடிவு செய்தல் நூல்களில் விதிக்கப்பட்ட இயல்பான தொன்ருகும். அதுவும் அல்லாமல் சொல்லதற்கரிய தருமமும் ஆகும்.

என கந்தபுராணத்து மூன்ருவதும் மகேந்திர காண்டத்து வீரவாகு கந்தமாதனஞ் செல்படலத்து மூன்ருவது பாடலின் கருத்தாக அமைகிறது. அப்பாடலை அதில் காண்க.

ஆதலின் சைவசித்தாந்த கொள்கையில் எல்லாரும் இறைவனுடைய குழந்தைகளாகக் கருதப் பட்டாலும் தீங்கு செய்வாரைத் தண்டித்தல் கண்டித்தல் அறமே என முருகன் திருவாக்காக வருகிறது. இதனை அவர் அடியவராக வரும் பெருமையுடைய நாங்கள் உணர்ந்து எவ்வாருக அமைய வேண்டும் சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் நீதியுடையவராக பிறர்க்கு எம் செயலால் தீங்கு விளைவியாதவராக; மற்றையோர் மனம் வருந்த நடந்து கொண்டு அச்சமின்றி கோவில்களிலும் பல தீங்குநெறிகளைப் புரியாதவராக இருக்க வேண்டியவரே? அதே கந்தபுராணம் இன்னமும் வலியுறுத்திச் சொல்கின்றது ஒன்று அதுதான் தீங்காய் நின்ற தீவினையாளர் சிதை வாகிப்போம் காலத்தில் சேர்ந்தர் சேர்ந்தவர் தாமும் போகாரோ. எனக் கூறுகின்றது. அதன் அர்த்தத்தை நோக்கிருல் தீங்காகிய செயலைப் புரிந்து நிற்பார். சிதைவாகிப் போவர். அது மட்டுமல்லாது அவர்க்கு உடைந்தையாக நிலைருரும் சிதைவாகிப் போவர் என்றதே யாகின்றது'

ஆகவே சைவசித்தாந்த கொள்கையில் இறைவனுடைய வழியால் நல்லவரும் கெட்டவரும் உற்பவித்தனர் எனினும் தீது செய்வாரால் உலகிற்கு தீங்கு பரவா வண்ணம் அவரைக் கண்டித்து தண்டித்தல் அறனே யாகும் திருக்குறளும் என் சொல்லுகின்றது.

தீமை புரிவாரை அரசன் தண்டித்தல் நல்ல நெல்விளையும் வயலில் களைபிடுங்கியதற்கு நேர் ஒப்பாகும்

என்றதேயாகும். இந்த கருத்துக்களை நாம் சிந்திக்க வேண்டும். இது மட்டும் அல்லாமல் பெரிய புராணம் என் சொல்லுகிறது.

கோவிலில் தீங்கு செய்வகரை தண்டிக்கும் சில செயல் சொல்லுகின்றது. அவை தான் கோவில் புதுப்பூ நிலத்தில் விழுந்து கிடந்ததை எடுத்து அரசனது பட்டத்து தேவி மணந்ததற்காக அவள் மூக்கினை அறுத்தார் செருத்துணை நாயனுர். அரசன் வந்து அதைக் கண்டு நடந்ததை விசாரித்து அப்படி கோயில் பூ தொட்டு மணந்ததற்கு தன் மனைவியின் மூக்கை அறுத்ததுடன் அமையாது தொட்ட கையையும் தன் கைவாளால் வெட்டிய வரலாறும் உண்டு. கோவில் நெல்லை எடுத்துண்ட தன் குடும்பத்தையே வேருடன் அழித்த கோட்புலி நாயனுரது வரலாறும் உண்டு. இப்படி எத்தனையோ அபராதச் செயல்களுக்கு தண்டனை விதித்த வரலாறும் உண்டு. இவற்றை எல்லாம் எழுதிய பெரிய புராணத்தை 12 ம் திருமுறை என் நம்மவர் போற்றி விழாக் கொண்டாடுகின்ருர். சேக்கிழாருக்கு ஒரு நாள் விழா எடுக்கின்ருர். விழா முடிந்து விடிய விழாச் சபையாரே என்னுனர் என்பதே தெரியாது?

இப்படியாக எம் சைவ சித்தாந்தத்தில் தீங்கு அகல வேண்டும் தீாது எல்லாம் ஆழ வேண்டும். என்ருல் எம்கோவிலில் நடைமுறைகளை சிறிது எடுப்போம்.

ஒரு கோவிலின் அயலில் உள்ளார் அனைவரும் அமைதியாக வாழ முடியாதபடி ஒரு நோயாளர் மனச்சாந்தியுடன் நித்திரை செய்ய முடியாத படி 24 மணி நேரமும் ஓயாது ஒரே சத்தமாக ஒலிபெருக்கி குளறல். இரவு எட்டு மணியுடனுதல் அதை நிற்பாட்ட விருப்பமில்லை. ஐயோ. செத்த வீட்டில் ஒரே ஓலமூடல் போன்றே கோவிலிலும் ஒரே குழறல் இது உண்மையில் ஒரு கோவில் இறைவன் இருப்பிடமாகக் கருதப் பட்டால் இது அங்கு தேள்வையா? கோவில் எதற்கு இறைவனை அங்கு எழுந்தருளச் செய்து அவருக்கு அங்கு நாம் தொண்டு செய்து உய்தி பெறற்கு. அந்தணரும் அபிடேகம் ஆராதனை முதல் தொண்டு; தாம் தூய்மையாக நடப்பது தொண்டு; அன்புடன் இறைவனுக்கு அருச்சனை செய்தல் தொண்டு பூக்கொய்தல் தொண்டு மாலை கட்டல் தொண்டு வீதியினைக் கூட்டித் தூய்மை செய்தல் தொண்டு. கழுவுதல் தொண்டு. சங்கநாதம் வாத்தியம் இவை முழங்கல் வேதம் ஓதல் பாடல் ஓதல் இவையாவும் தொண்டேயாகும், இவைகள் இறைவன் சந்நிதியில் மிகு பத்திமை உடனும் அன்புடனும் அமைதியுடனும் பிறர்தம் செயலால் அல்லல் படாவகையும் அமைதல் வேண்டும். இந்த செயல்களுக்கு ஒலி பெருக்கிமின் ஒளி தேள்வையா? இறைவனுக்கு பாடல் கேளாது என்று ஒலிபெருக்கியில் சொன்ருல் கேட்குமோ?

இறைவனையும் ஓர் இயந்திரமாகக் கருதுவதா? இறைவன் இருப்பிடத்து உண்மையாக ஒலி பெருக்கி பாதகம் அல்லவா? ஒலிபெருக்கி எதற்காக வேண்டப்படுவது.

நாம் செய்கின்ருேம் என்ற சொலை பிறர் அறியட்டும் என்றதற்காக அல்லவோ பாவிக்கிருர்? இறைவன் அறிய தொண்டு கொள்வார் ஊர்மக்கள் தம் செயலை அறிந்து பாராட்ட விரும்பினுல் அது தொண்டாமோ? இன்று பட்டத்துடன் மிளிரும் பண்டிதமணியே இதற்கு பதில் சொல்வாய் சிவத்தமிழ் செல்வியே பதில் சொல்வாய் சிவ்தரும வள்ளலே பதில் சொல்வாய் திருமுருக கிருபானந்த வாரியே பதில் சொல்வாய்? உண்மையில் கோவிலில் செய்யும் செயல் தொண்டு எனக் கருதப் பட்டால் அதற்கு வீளம்பரம் தேள்வையோ? உங்கள் பிரசாரமும் மேடையும் தொண்டா? பதில் தாருங்கள் எங்காகிலும் ஆகமம் உங்களது பிரசாரத்தை கோவிலில் ஒலிபெருக்கியில் ஊர்மக்களை தத்தம் சந்நிகளை தத்தம் தியான நெறிகளை தத்தம் ஆத்மார்த்த நெறிகளைச் செய்ய விடாதபடி தடுத்து ஊரடங்க இரவு பகலாக ஒரே குளறலாக கத்திடும் படி சொல்லி இருக்கின்றதா? இந்தக் குளறல் கோவிலில் நீதியுடையதா? முதல் பதில் தாருங்கள்? நான் சந்திர தீபம் எழுதுகின்றேன் அது விழல் கண்டனம் நான் விசரன் என்று பேதைப் பிரசங்கிமாரே நீங்கள் ஊர் ஊராக பலரிடமும் சொல்லுகின்றீர் நீங்கள் கோவிலில் இப்படி நடப்ப பார்த்துக் கொண்டு நீரும் ஒலிபெருக்கியில் பேசவில்லையோ? இது நீதியோ? இதுதானு நால்வர் வழி? திருநாவுக்கரசர் நீதியால் நினையமாட்டீர் என்கின்ருரே! ஓதிக்கதறிப் பிரயோசனமில்லை என்கின்ருரே இதற்கு என்ன பதில் தயவு செய்து பதில் தாருங்கள்.

இதோ இன்று நீங்கள் பிரசங்கம் செய்யும் கோவிலில் என்ன நடக்கிறது. நீங்கள் அறிய உண்மையான சம்பவங்கள் நடைபெறுவன சொல்கின்றேன்.

கோவில் மடப்பள்ளியில் மன்மதலீலை கோவில் பூசை செய்யும் ஐயர் இளம் பெண்ணுடன் செய்திருக்கிருர் மடப்பள்ளியில் பீடி பற்றுகிருர். கோவில் முன்றலில் கொலைகள் நடக்கப்படுகிறது. கோவிலில் கும்பிடப் போன ஒரு பெண்மீது குருக்கள் அட்டகாசம். கோவில் குருக்கள் தன் மனைவியை கோவில் மண்டபத்து வைத்து அடித்து உதைத்தல் கோவில் மண்டபமுன்ருல் கடுதாசி விளையாடி அடி பிடி கோவில் மண்டபத்து சுருட்டு பற்றுதல் சாப்பிட்டு வந்து கோவில் மண்டபத்து படுத்து நித்திரை. கோவில் மண்டபத்து கூடியிருந்து வீரகேசரிப்பத்திரிகை வாசித்து ஊர்ப்புதினம். கோவில் ஐயா சாராயம் குடிக்கப் போய் குடித்தவர் இன்னுமொருவர் அங்கு குடித்து நின்றவர் கண்டு ஓடி வந்து ஐயரை நீர் இன்றைக்கு பூசை பண்ணுதை என தடுத்தாராம் கோவில் மதில் மீது நீட்டுப் பாவாடை கோவில் நந்தவனப் பூ பல உயர்ரக குடும்பப் பெண்கள் கொண்டை சூடல் கோவில் அபிடேகத்துக்கு கொடுக்கும் திரவியம் சுவாமிக்கு பாவியாதமை. கோவில் மண்டபத்து மதுவெறியில் கூடி ஓல மிடும் மக்களுடன் குருக்களும் சேர்ந்து வேடிக்கை பண்ணல் கோவில் பூசையில் சினிமாப்பாட்டு கோவில் பசுக்கள் கொலைகாரற்கு விற்பனை கோவிலில் கும்பிடப் போவாரை தூபமிடப் போவார்க்கு அடி கோவிலில் கற்பூரச் சட்டி முதல் திருப்பலி ஏந்த பணம் வசூலிப்பு இத்தனை பாதகங்களும் நடக்க நீங்கள் உங்கள் பிரசங்களைச் செய்துதானே இருக்கின்றீர்கள். இவைகள் நடப்பது உங்கட்கு தெரியாது என்று சொல்வீரோ?

இவையும் இவை போன்ற ஏனைய பாதகங்களும் எமது நாட்டில் நடைபெற 24 ஒலி பெருககிக் குளாயில் பிரசங்க சினிமா பாடலும் ஓலமிட் இவை நாட்டில் பின்ருல் விளையப் போகும் அழிவுகட்கு ஏதுவாக அமைகிறது. அல்லாமல் அமையும் வித்தாவது என எந்த ஒரு அறிவாளிக்கும் தெரிய வேண்டுமே? தமிழருடைய பண்பாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த ஒரு கொள்கை கோவிலில் புண்ணியச் செய்கை குன்றி தீய செயல்கள் மக்களை வருத்தும் செயல்கள் நிகழ்வதாருல் நாட்டிலும் இயற்கையாலும் இனக்கலவரங்களாலும் துயரம் ஏற்படும் என்பதே ஒன்பதாம் திருமுறையான திருமந்திரம் இதற்கு தக்க ஆதாரம் காட்டுகிறது ஆதலில் கோவிலை பிரசாரத்திற்குரிய இடமாக்காது எல்லோர்க்கும் நலம் விளைக்கும் புண்ணியச் செய்கை உடைய இடமாக்கிருல் இங்கு ஒரு போதும் துயரம்வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகசுவாமி பணக்காரரது சுவாமிஎன போய்க்காணப் பயந்திருந்தேன்

இப்படியாக அளவெட்டி தெற்கு அருணோதயக் கல்லூரியின் அருகாமையில் வாழும் திரு. எம். செல்லத்துரை என்னும் நாமமுடைய சுகாதார வைத்தியக் கந்தோரில் கடமையாற்றி தற்பொழுது இளைப்பாறி இருக்கும் நண்பரொருவர் கூறினார்.

திருமுருக கிருபானந்தவாரியார் தனது பிரசங்கத்திற்கு ஒருநாள் தலமை தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரத்தை எம் சிவசிதம்பரம் என எம் என்ற ஆங்கில சொல்லை எம் என்று தமிழாக்கி பாராட்டி உவந்து பேசியதாகப் பத்திரிகை ஒன்றில் பார்த்த ஞாபகம்வருகிறது. வாரியார் வாரும் மொழிகளால் பலரதுஉள்ளத்தையும் வாரி தமது பொருளையும் வாரிக்கொண்டு பக்குவமாகப் போய்ச்சேர்வதற்கு பலரையும் உசத்துவதில் மிகுதிறமைசாலி. அவர் பூஜை பண்ணிய மூர்த்தியைத் தூக்கி அவர்தலையில் மோதிய வரலாறு கூட அந்த ஒரு மூளைத்திறனுக்கு நிகரில்லை. மோடனே அவர் தலையில் மூர்த்தியால் போட்டவன்.

ஆனால் நான திரு எம். செல்லத்துரை என்று குறிப்பிடும் பொழுது அவரது முகவரியில் காணப்படும் எம் என்ற ஆங்கில பதத்தையே குறிப்பிடுகின்றேன். அவர் என் கட்சிக்காக கட்டுரை தந்தவர் அன்று. அல்லது அவரை நான் உசத்திச் சொல்லி எனது கட்டுரையை இனிமையாக்க விரும்பவில்லை. ஏனென்றால் எமக்கு முகவரி தரும் போது அவர் எம். என்றே தமது தந்தையின் பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் சொன்னவர். நானும் அவர் தந்தையின் நாமம் யாது எம் என்றால் எது மு, ம, மா, பல தமிழ்ச் சொற்களுக்கும் பொதுவாக நிற்றலன் எம் என்றே குறிப்பிடுகிறேன். ஆகையால் எம் என்றதை நான சட்டி பிடிக்கிறேன் என்று என்னை எண்ணவேண்டாம்.

ஆம்; அன்பர் செல்லத்துரை தெரிவித்தது போல பலரும் யோக சுவாமிகளைப் பணக்கார வீட்டுச் சாமி என்று கூற நான் கேட்டனன் என் நிலையில் நான் ஒரு ஏழை என்றே சொல்லலாம். இன்றும் ஓர் ஓலைக்குடிசையில் வாழ்கின்றேன். மண் சுவர்க்குடிசை. இக்குடிசையில் தான் கந்தபுராணம் ஆறு காண்டம் பெரியபுராணம் 5 பகுதி தேவாரம் திருவாசகம் முதல் எட்டு திருமுறைகள் அச்சாகி புத்தகரூபமாக இருந்த இடம்.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது எனது கந்தபுராண விரிவுரை கேட்ட இரு அரசாங்கத் துறையில் மேம்பாடான தொழில் பார்த்த இருவர் எனக்கு சிறுநோய் வந்தபோது பார்க்க வருவதற்கு வந்தவர் செவ்வாய்க் கிழமை பார்க்க வந்தவர். ஏன் என்றால் வேறு நாளில் என் வீட்டில் வந்தால் சிலவேளை தேனீர் அருந்தவேண்டி வரும். பின் இன்னார் வீட்டில் இந்த விசரன் வீட்டில் இன்னார் போய்த் தேனீர் பருகினார் என்று மதிப்பிற்குரிய ஏனைய பணக்காரர் நினைந்தாலும் என்று அவர்கள் நினைந்து அப்படிச் செய்திருக்கலாம் என நினைந்தேன்.

ஆனால் யோகசுவாமி எல்லாப் பணக்காரர் வீட்டுக்கும் போவது என் வீட்டில் வருவதில்லை. அடுத்து என் வீட்டுக் குடிசையில் வந்தால் என் பழி ஒரு வேளை அவரைப் பற்றி வருத்தா திருக்கட்டும் என நினைந்திருந்தவன். அப்படி நினைந்திருக்கும் என்னை ஒரு நாள் சுவாமி நேர் நோக்கி நான் தான் நீ பிறகு ஏன் பயப்படுகிறாய் என்றது. இதுமட்டன்றி இன்னொரு நாள் அவரைக் கும்பிடப் போன என்னை நோக்கி; நீ என்னைக் கும்பிடாதே. என்னைப் போல நீயும் வா என சொன்னார். இன்னொரு நாள் கொழும்புத்துறைக்கு கும்பிடப் போய் படலை துறக்க ஏடோய் அங்கை உன் வீட்டில் நான் இருக்கிறேன். இங்கு ஏன் வந்தாய் அங்கிருந்து நீ நெடுகக் கும்பிடு என்று அருள்செய்தார்.

அன்று எல்லாம் அவர் வார்த்தை வேடிக்கை என்றே நினைந்திருந்தேன். இப்படியாக சுவாமிகளை பலரும் பணக்கார வீட்டுச்சாமி என பல குறைகள் சுமத்திட எனக்கும் வேதனையாக இருந்தது; என் மன நினைவுப்படி சுவாமி பணக்கார வீட்டுச் சாமி என்று புண்ணியரின் சுவாமி என்றே நாம் சொல்லலாம்.

இப்படியாக பணக்கார வீட்டுச் சுவாமி என நானும் பயந்திருந்தேன் எனச்சொன்னரே திரு செல்லத்துரை. அப்படி அவர் சொல்லிவிட்டு அப்பால் தொடர்ந்து சொன்னார் உங்கள் பத்திரிகையில் நாம் விருப்பமுடன் படிப்பது யோகசுவாமிகளது வரலாறுகள். அவைமிகத் தெளிவாகவும் இருக்கிறது. அதோடு ஆநந்தமாகவும் இருக்கிறது எனக் கூறிப் பின்னர் சொன்னார் உண்மையில் நானும் யோக சுவாமியிடம் போக ஆசைப்பட்டு இருந்தவன். ஆனால் நம்மதரவளி போனால் ஏசிக் கலைப்பார் என்றும் பணக்காரர் போனால் வரவேற்பர் என்றகதை அடிபட்டதால் பல நாள் நினைந்து அதுமனம் வரவில்லை. கடைசியாக அவரிடம் போகாது என் வாழ்நாளில் ஈடேற்றம் காணமுடியாது என்ற ஓர் துயரநிலை நமக்கு வந்தது. அந்தச் சங்கடத்தால் அவரிடம் நான் போய் என்துயரம் அத்தனைக்கும் தீர்வு பெற்றேன். இப்பொழுது நான் நன்குடன் வாழுவதும் அவர் அருளால் தான். இவற்றை எல்லாம் வெளிக்காட்டிச் சொல்வதும் நல்லதல்ல என்ற பயத்தால் நான் இந்தக் கதையை ஒருவரிடமும் சொல்லிக் கொள்வதில்லை. உண்மையில் யோகசுவாமி பெரும் கருணை உடையவர் என்பது அவரிடம் நேரில் சென்றபின் தான் தெளியவந்தது. ஆதலினாலே அவர் பெருமை பற்றி உங்கள் பத்திரிகைகளில் அடிக்கடி செய்துவர நானும் என் மனைவியும் பிள்ளைகளும் விரும்பிப் படிப்போம். இதுமட்டுமனறி உமது பத்திரிகையை இன்னும் பலர் எம் நண்பர்கள் எடுத்துச் சென்று வாசிக்கின்றார்கள். நீங்கள் என்ன இருந்தாலும் உங்களது பத்திரிகைகளில் மற்றக் கட்டுரைகளுடன் சுவாமியைப் பற்றிய வரலாறும் கட்டாயம் எழுதிவர வேண்டுமெனக் கூறினார்.

நான் அவரைக் கேட்டேன் நீங்கள் சுவாமியிடம் சென்ற வரலாற்றைச் சொல்லுங்கள். அதை நானும் கேட்க ஆவலுடையேன் எனக் கேட்டேன். அப்போது அவர் எனனை நோக்கிச் சொன்னார். இங்கு பாரும் எனக்கு சில வருடங்களுக்கு முன்பு மிகவும் ஒரு சங்கடமான நிலை வந்து கொண்டது. அந்த நாளில் நான் பெரிதும் மனவேதனைப் பட்டகாலம், நெடுங்காலமாக யோக சுவாமியிடம் போக நினைந்திருந்தவன். ஆனால் முன் சொன்ன பயத்தால் அவரிடம் போகவில்லை.

அப்படியாக என்ன சங்கடம் எனக்கு வந்தது என உங்களுக்குச் சொல்லப் போனால் நான் பாருங்கள் இப்ப சுவாமியும் மறைந்து பதினைந்து வருடத்திற்கு மேலே இருக்கும். அப்ப அவர் மறையிறதற்கு சரியாய் ஒருவருடத்திற்கு முந்தி என நினைக்கின்றேன். ஏன் என்று சொன்னால் சுவாமியிடம் நான் போன அன்று என்னை நோக்கி தான் இவ்வுலகை விட்டுப் போவதற்கு ஒருவருடமும் ஒரு நாளும் இருக்கடா என்றவர். சரியாய் அவர் சொன்னமாதிரி அன்றைக்கு நான் அவரிடம் போன திகதியிலிருந்து ஒருவருடம் ஒரு நாள் கழிய யோக சுவாமி மறைந்திட்டார் எனக் கேள்விப் பட்டேன். ஆனதினால் இப்ப ஒரு பதினைந்து பதினாறு வருடத்திற்கு முன் நமக்கு என்னால் தீர்வு காணமுடியாத சங்கடம் வந்தது. அவைதான் எனது தந்தையார் நோய் வாய்ப்பட்டு சத்திர சிகிச்சை செய்தால் அன்றி நோய் மாறப்படாது என்ற அது ஒன்று தந்தையார்க்கு சத்திர சிகிச்சை செய்ய மனமில்லை. அவர் நோயால் வேதனைப் படுவதைக் காண எமக்கு சகிப்பதில்லை. அடுத்து எனது மனைவி கருப்பமுற்று பிரசவத்தை அண்மிக் கொண்டிருக்கும் நாட்கள். வைத்திய நிபுணர்கள் என் மனைவியின் கரு இரணப்பிள்ளை அது சிக்கலாய் இருக்கின்றது கவனம் கவனமென எச்சரித்து ஓர் நிபுணரின் ஆலோசனை பெற்று நற்சிகிச்சையுடன் எஞ்சிய நாளைப் பாதுகாக்க வேண்டுமென்றதால் நிபுணருக்கு என் மனைவியைக் காட்ட வேண்டும். அடுத்து தந்தையார் ஆஸ்பத்ரியில் இருந்த நேரத்தில் எனக்கு பலாங்கொடைக்கு மாற்றம். இந்த மூன்று சங்கடத்தையும் வைத்து கவலை மிகுதியால் வாடிக் கொண்டிருந்தேன்.

அப்போது எனது மனைவியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அங்கு பரிசோதனை நடத்தி வேண்டிய பரிகாரம் செய்ய நினைந்திருந்து அதற்காக நிபுணர் ஒருவரைச் சந்தித்திட வேண்டி யாழ்ப்பாணம் போகவேண்டி வந்தது. இது இப்படியாக எனக்கு இந்த சங்கட நிலையில் யோகசுவாமியைச் சென்று சந்திக்க விரும்பினேன், தனித்து போக பயமாக இருந்தது. ஆதலினால் வடக்கு புன்னாலைக் கட்டுவனை சேர்ந்த என் நண்பரோருவர் அவரையும் அழைத்துக் கொண்டு யோக சாமியிடம் போனோம். நாம் போவதற்காக ஒரு காரை கூலிக்கு பிடித்துக் கொண்டு கொழும்புத்துறைக்குச் சென்றோம். அந்தக் கார் மிகவும் பழங்கார். கதவுக் கண்ணாடிகள் கூட சரியாக இல்லை. அந்த காரில் தான் நானும் என் நண்பரும் சென்று கொழும்புத்துறயை அடைந்தோம். அப்பொழுது சுவாமி விழுந்து கால் நடக்க இயலாதிருந்த காலம் நாங்கள் போன நேரம். சுவாமி ஒரு கட்டிலில் இருந்தார். நாம் சென்று அவரது ஆச்சிரமத்தில் பக்கராக உள்ள இடத்தில் இருந்தோம். அப்பொழுது கண்ணை மூடி சுவாமி தியானம் செய்து கொண்டிருந்தார். நாம் போய் தரிசித்துக் கொண்டு பக்கராக இருந்த நேரம் அவர் கண்ணால் கண்ணீர் பெருகுவதைக் கண்டேன். அப்படியான நிலையில் சுவாமி நெடுநேரம் இருந்தார். எங்களுக்கு ஏதும் ஓர் பதில் கிடைத்திடவில்லை. எனக்கும் இருந்து அலுத்துவிட்டது. எனது நண்பருடைய காதுக்குள் நாங்கள் இனிப் போவோம் எனக் கூறினேன். ஏன் என்றால் மனைவியின் விடயமாக வைத்திய நிபுணரையும் அன்று சந்தித்திட வேண்டி இருந்ததால் என் நண்பரிடம் அப்படிச் சொன்னேன். என் நண்பர் சொன்னார் கொஞ்சம் பொறு என்றார். இந்த வார்த்தைகள் காதுடன் காதுதான் பேசப்பட்டன. ஆனால் சுவாமி அதேவேளை என்னை நோக்கி நீ போகாதை உன்னுடன நானும் வாறேன் என்றார். இதைக் கூறியதுடன் தனக்கு இன்னமும் ஒருவருடமும் ஒரு நாளும் தான் இங்கு இருக்கின்றது என்றார்.

இந்தவகை சுவாமி சொன்னதும் அன்றுதான் சுவாமி வெளியில் செல்ல விரும்பினார் என்பதை அறிந்து கொண்டு அங்கிருந்தவரும் எங்களை நீங்கள் யார் என எம்மை விசாரித்தனர். சுவாமியின் விருப்பப்படி நாம் எமது காரை ஆச்சிரம வாசலுக்கு உள்ளே கொண்டுவரச் செய்தோம். அப்படிக் காரை கொண்டு வந்து உளளேவிடுவித்து ஆச்சிரம வாசலில் காரை நிறுத்தினோம். நான் நினைத்தேன சுவாமி பின் சீற்றில் இருந்திட விரும்புவார் என்றதாக. அதன்படி பின்னால் வைத்திருந்த பொருள்களை முனசீற்றில் வைத்து பினசீற்றைத் தூய்மைசெய்தோம். அது ஒரு பழங்கார். இருந்தாலும் சுவாமி விருப்பத்தை தடுத்திட விரும்பவலலை. இதனாலே சுவாமியை நாம் தூக்கிவந்து பின்சீறறில் ஏத்த ஆயத்தமாக அவர் சொன்னார் நான் முனசீறறில இருககப்போறன் எனறதாக. முன்சீற்றில் எமது செருபபுக்களை முன எடுதது பினசீற்றில் அவர் இருகக ஆயத்தம் செய்திருநதாம. ஆனால் சுவாமியைத் தூக்கி வந்தவுடன் அவர் முன்சீற்றில் இருக்கவிருமபயதால் அப்படியே அவரை முன்சீற்றில் ஏற்றினோம். சுவாமியின் திருக்கால் புண்ணில் இரத்தம் வடிந்து எமது கைகளில் கூட அது பட்டுக் கொண்டது. இப்படி அவரை ஏற்றியபின் எம்மை நோக்கி இக்காரைக் கைதடிக்கு விடுமென்றார். நாம் பின்னால் ஏறி அமாந்து கொளள கார் கைதடிக்குச் சென்றது. போகும் வழியில் முன் பின் அறியாத எனதுகுலத்தவரைப் பற்றி நெருங்கிய உறவினரைப்பற்றி சுவாமிதான் வரலாறு சொல்லிக் கொணடு சென்றார். அப்படியாக பேசிக்கொணடு நாம் கைதடிக்குப் போனோம். அங்கு போனவுடன் ஒருவீட்டில் சென்றோம். சுவாமி காரில் வரக் கண்ட அங்கிருந்த சில பெண்கள் அவசரம் அவசரமாக சுவாமி இருந்திட ஓர் வசதியான கதிரை ஆசனம் அமைத்தனர். பின்னர் அந்த ஆசனத்தில் நாம் சுவாமியை இருத்தினோம். அங்கு பிறரும் பலர் வந்திருந்தனர். அப்பொழுது அங்கிருந்த எல்லார்க்கும் உபதேசமாக சில வார்த்தைகள் மொழிநதார். பின்னர் என்னிடம் மூன்று வாழைப்பழம் தந்தார் தரும்போது சொன்னார். உமது தந்தைக்கு சத்திர சிகிச்சை நடவாது. உமது மனைவி சுகமாக பிரசவிப்பாள். நீர் பயப்படாமல் நீர் மாற்றிய விடம்போம் என்று கூறியருளினார். நான் அவர் தந்த வாழைப்பழத்தை ஏற்று வணங்கினேன். பின்னர் என்னை நோக்கி நீர் போகலாம எனக்கு கார்வரும் என்றார். நான் அப்பொழுது போக மனம் வரவில்லை ஏன் என்றால் காரில் கொண்டு சென்ற நாங்கள் அவரை விடுத்து நாம்போவது சரியில்லையே என்ற காரணத்தால் நின்றோம். மீண்டும் சுவாமி என்னை நோக்கி இல்லை நீர் போம் நான் வேறு காரில் வருவேன் என்றார். அப்போது அங்கிருந்தாரும் அப்படியே செய்யுமாறு சொல்லினர் நாம் அதுகேட்டு திரும்பினோம்.

சுவாமி சொற்படியே மூன்று காரியமும் நடந்தது. நமது தந்தையார்க்கு சத்தரசிகிச்சை நடைபெறவில்லை. சில காலம் வாழ்ந்து அவர் மறைந்தார், என் மனைவி சுகமாகப் பிரசவித்தாள். நான் பலாங்கொடைக்கு மாற்றலாகிச் சென்று ஏதும் ஓர் சங்கடமும் அங்கு இலாது அங்கிருந்து திரும்பி யாழ்ப்பாணம் வந்தேன். அவரிடம் போன பின் தான் அவர் ஓர் புண்ணியரின் பொருள் என்றது தெளிவாயது. அதில் மிகு அற்புதம் யாது என்றால் சுவாமி நான் போன நேரம் தியானத்தில் கண்ணீர் பெருக்கியவாறு இருந்து விட்டுச் சொன்ன திருவாக்கு.

"எனக்கு இன்னமும் ஒரு வருடமும் ஒரு நாளும் இருக்கின்றது"

என்றது அவர் சொல்லியபடி அப்படியே நடந்தது. நான் அவரைக் கண்ட நாளில் இருந்து ஒருவருடமும் ஒரு நாளும் கழித்த அந்தப் புண்ணிய தினத்தில் எம் சுவாமி எம்மை விட்டுப் பிரிந்தார். உண்மையில் இந்த இரகசியத்தை ஆர் அறிவார். அவர் ஓர் திரிகால ஞானி அவர் யாழ்ப்பாண மக்கள் அனைவரிடமும் அளவிறந்த அன்பு பூண்டவர் என்பது அவரிடம் போன பின் தான் தெரிந்தது. அவர் சிலருடைய சாமி மற்றவருடையது அல்ல என சிலர் நினைப்பதும் நடப்பதும் முற்றிலும் தவறேயாகும் என்றார்,

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கில இருக்கும் வை. நல்லையா அவர்களால் வெளியிடப்பட்டது. தொடர்பு கொள்வோர் சந்திரதீபம் கொக்குவில்என விலாசமிடலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org